


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 179 சுபகிருது வருடம், மாசி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 07, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் பொதுஜன பெரமுனவின் அரசியல் பிரமுகர்களை தொடர்புகொள்ள முயன்றாலும் முன்னரைப்போல இலகுவில் அவர்களை தொடர்புகொள்ள முடியவில்லையாம்.

முன்னர் மஹிந்த பாராளுமன்றம் செல்லும்போது அவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். ஆனால், இப்போது ஜனாதிபதி ரணில் பாராளுமன்றம் செல்லும்போது இருக்கும் எம்.பிக்கள் கூட்டம் மஹிந்த செல்லும்போது இல்லையாம்.

எல்லாம் பதவி இருக்கும்போது மட்டும்தான் என்று புலம்புகின்றனராம் ராஜபக்ஷ தரப்பினர்.

## புதிய கூட்டணி உருவாகிறது!

### அரசியல் அரங்கில் திடீர் திருப்பங்கள் நடக்கும் வாய்ப்பு



ம.சசிதரன்

மார்ச் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ள நிலையில், தற்போது அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி தேசிய ரீதியான ஒரு கட்சியை உருவாக்கும் முனைப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருவதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அரசாங்கத்தில் பிரதானமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பல பாராளுமன்ற உறுப்பினர்களை இணைக்கும் முயற்சியிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அறியமுடிகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிகொள்ளும் முனைப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி உறுதிபூண்டுள்ளதோடு, அதற்காக ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சியும் தற்போது இடம்பெற்று வருவதாக தெரியவருகிறது. இவ்வாறான கூட்டணியொன்றை அமைத்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மாத்திரமன்றி மாகாண சபைத் தேர்தலையும் இலகுவாக வெற்றிகொண்டு பொருளாதாரத்தை திட்டமிட்டவாறு...

02 பக்கம்

## முதலிகே உள்ளிட்ட 62 பேருக்குப் பிணை

பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சுக்குள், பலவந்தமாக நுழைய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நேற்று (27) கடுவெல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைய முயற்சித்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 62 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை திறக்குமாறு வலியுறுத்தி, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இவ்வாறு கல்வி அமைச்சுக்கு சென்றிருந்தனர்.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட 62 பேரும் கடந்த 24ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்றைய தினம் குறித்த நபர்களை கடுவெல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

## போராட்டத் தாக்குதல்: அறிக்கை சமர்ப்பிக்குக!

### பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு

கொழும்பு யூனியன் பிளேஸில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 24 மணித்தியாலங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நேற்று முன்தினம் உயரழுத்த நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்துள்ளது.

24 மணித்தியாலங்களுக்குள் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.

கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யூனியன் பிளேஸ் பகுதியில் இந்தப் பேரணி இடம்பெற்றபோது, அதனைத் தடுக்கும் வகையில் பொலிஸார் உயரழுத்த நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த பகுதியில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்த தடைவிதித்து நீதிமன்ற உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

02 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தல் 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்படும் வாய்ப்புகள் அதிகம்

### பெவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சகல செயற்பாடுகளும், சட்டத்துக்கு அப்பால் சென்று தேர்தலை காலந்தாழ்த்தும் வகையிலேயே அமைந்துள்ளன. அதேபோன்று, தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்காலங்களில் சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு தேர்தலை நடத்தவிடாமல் செயற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

02 பக்கம்

## நாடு முழுவதும் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை



படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

### நாளை மேற்கொள்ள தீர்மானம்

நா.தினுஷா

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை (முதலாம் திகதி) நாடு முழுவதும் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் உள்ளிட்ட...

02 பக்கம்



## தேர்தலுக்கான நிதி வழங்கல்: சபாநாயகர் விசேட கூட்டம்

### பாராளுமன்றத்தில் இன்று

கே.சுபானி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை பெற்றுக்கொடுப்பதில் தலையிடுமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று...

02 பக்கம்

## தேர்தல் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம்

### சபாநாயகர் அனுப்பிவைப்பு

நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நிதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி, தேர்தல் ஆணைக்குழுவால் தனக்கு அனுப்பிவைத்த கடிதம் தொடர்பான தனது பதிலை நிதி அமைச்சருக்கு...

02 பக்கம்

## கடற்றொழிலாளர்கள் வாழ்வில் எவரும் விளையாடக் கூடாது!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இந்திய கடற்றொழிலாளர்கள் அனுமதிபெற்று வடக்குக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவது தொடர்பான விடயம் இதுவரை பரிசீலனையில் உள்ளதாகவும், இந்நிலையில் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தாம் தீர்மானத்தை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய...

02 பக்கம்

## சிறுவர் இல்லத்தில் 11 சிறுமிகள் துஷ்பிரயோகம்

இரத்தினபுரி, இறக்குவானையிலுள்ள சிறுவர் இல்லத்தில் 11 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 60 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடகவெல பிரதேச செயலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சிறுவர் இல்லத்தின் கண்காணிப்பாளரின் கணவரான சந்தேகநபரை இரத்தினபுரி சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் கைதுசெய்துள்ளது.

53 வயதான கிருஷ்ணசாமி சந்திரமோகன் என்ற சந்தேகநபர் இறக்குவானை பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பணிபுரிபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

02 பக்கம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் மனுவை பரிசீலிக்கும் உயர்நீதிமன்றம்



உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்துவதற்காக 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின்..

02 பக்கம்

## கொழும்பு வந்த சுகன்யா



இந்திய கடற்படைக் கப்பல் (ஐஎன்எஸ்) 'சுகன்யா' உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

(ஐஎன்எஸ்) சுகன்யா 101 மீற்றர் நீளமுள்ள கடல் ரோந்துக் கப்பலில் 106 பணியாளர்கள் உள்ளனர். இதற்கிடையில், கப்பலின்..

02 பக்கம்

## தே.ம.சக்தி போராட்டத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு



கொழும்பில் தேசிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் நடத்திய போராட்டத்தின்போது காயமடைந்த நிவித்திகல பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் நிமல் அமரசிறி (வயது 61) வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பொலிஸாரால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 50இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

## அரசாங்க நிதிக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து மயந்த இராஜினாமா



பதவிகளும், வரப்பிரசாதங்களும் தனக்கு பெரிதல்ல என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க, எதிர்த்தரப்பில் பொது இணக்கப்பாடு ஏற்படாததால் அரசாங்க நிதிக் குழுவின் தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (27) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## தேசிய கியூ.ஆர். முறைமை இப்போதைக்கு நீங்காது

### அமைச்சர் காஞ்சன



எரிபொருளுக்கான தேசிய கியூ.ஆர். முறைமை நிறுத்தப்ப[illegible] என்றும் ஏப்ரல் 10ஆம் திகதி முதல் கியூ.ஆர். முறைமையை நிறுத்துவது குறித்து எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை...

02 பக்கம்



# மக்களுக்கு இல்லாமல் குடும்பத்திற்கு பகிரமாட்டேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பகிர்ந்தளிக்க மட்டுமே தெரியுமென இந்நாட்டில் ஒரு குறிப்பிட்ட சிலரே நாடு முழுவதும் கூறிக் கூறித் திரிவதாகவும், சஜித் பிரேமதாச நாட்டின் 220 இலட்சம் மக்களுக்காக பகிர்ந்தளிக்கிறாரே தவிர, தனது நண்பர்களுக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ அல்ல என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச (24) வெலிஓயாவில் தெரிவித்தார்.

மேலும், மக்களுக்காக எதுவும் செய்யாது தம்பட்டம் அடிப்பவர்கள் எதையுமே செய்ய நினைப்பதில்லை எனவும், பொய்யான பாசாங்குகளைப் பேசி மக்களை ஏமாற்றி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் பஸ்களில் தங்கள் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் ஸ்டிக்கர்களாக ஒட்டி தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்திக் கொண்டாலும், 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பஸ்ஸையேனும் வழங்க அவர்களால் முடியவில்லை எனவும், ஆனாலும், பாடசாலை மாணவர்களுக்கு தான் பஸ் வழங்கும்போது, 'பஸ் மேன்' என்று தன்னை விமர்சிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் மக்களுக்கான சேவை நிறுத்தப்படாது எனவும் தெரிவித்தார்.

# விசேட சமூக சமையலறை நிகழ்வு சாகல ரத்நாயக்க தலைமையில்



கொழும்பு, ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரையில், விசேட சமூக சமையலறை நிகழ்ச்சியொன்று, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று (27) பிற்பகல் இடம்பெற்றது.

கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவின் 05 கிராமிய உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், ஊனமுற்றோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் உள்ளிட்ட 2300 பேருக்கு தினசரி போஷாக்கான உணவை வழங்குவதற்காக ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையை மையமாகக் கொண்டு இந்த சமூக சமையலறை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சாகல ரத்நாயக்க அதற்கான பங்களிப்பை ஏற்றுக்கொண்டிருந்ததுடன் சமூக சமையலறைக்கு வருகை தந்த மக்களுக்கு தனது கைகளால் உணவைப் பரிமாறுவதிலும் இணைந்து கொண்டார்.

ஹுணுப்பிட்டி கங்காராம விகாராதிகாரி கலாநிதி வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.



பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், பிரித்தானிய தூதர் சாரா ஹல்டன் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கு இடையில் நேற்று கொழும்பு வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் மலையக தமிழர் மற்றும் நாட்டு நடப்பு பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது.

# அனலைதீவில் கனேடியப் பிரஜைகள் மீது தாக்குதல் விசாரணையில் புதிய திருப்பம்

யாழ். ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கனேடியப் பிரஜைகளைத் தாக்கிப் பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதலாளிகள் கொள்ளையிடும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும், ஓர் ஆவணத்தைத் தருமாறு கோரியே தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

கனடாவிலிருந்து 75 வயதுடைய ஒருவரும் அவரது மனைவியும் அனலைதீவிலுள்ள வீட்டுக்கு வந்துள்ளனர். அவர்களது வீட்டில் ஏற்கனவே ஆசிரியர் ஒருவர் தங்கியுள்ளார்.

அத்துடன், வீட்டு மின் இணைப்பு திருத்தத்துக்காக ஒருவரும் கடந்த 21ஆம் திகதி இரவு அங்கு தங்கியிருந்துள்ளார். அன்றைய தினம் இரவு வீட்டுக்குள் வாள்களுடன் மூவர் நுழைந்துள்ளனர். அவர்கள் முகத்தை மூடி கட்டியிருந்துள்ளனர். வீட்டில் தங்கியிருந்த ஆசிரியரையும், மின் இணைப்பு திருத்தத்துக்காகத் தங்கியிருந்தவரை யும் கட்டியுள்ளனர்.

"உங்களுடன் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. அமைதியாக இருங்கள். இல்லையென்றால் வெட்டிவிடுவோம்" என்று வாள்களுடன் வந்தவர்கள் எச்சரித்துள்ளனர்.

கனடாவிலிருந்து வந்த வீட்டின் உரிமையாளரை வாளால் தாக்கியுள்ளனர். அவரை வெளியில் இழுத்துச் சென்று "சி.ஐ.டி.யிடம் கொடுக்கக் கொண்டு வந்த ஆவணம் எங்கே?" என்று கேட்டுத் தாக்கியுள்ளனர்.

அவரின் மனைவி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர் அணிந்திருந்த தாலிக்கொடி உள்ளிட்ட நகைகள் எதனையும் தாக்குதலாளிகள் கொள்ளையிடவில்லை. அவர்களின் கனேடிய கடவுச்சீட்டு இருந்த பொதிகளை அவிழ்த்துச் சோதனையிட்டு அதிலிருந்த ஆயிரத்து 20 கனேடிய டொலர் மற்றும் 25 ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் என்பனவற்றை மாத்திரம் எடுத்துச் சென்றுள்ளனர்.

"குருநகர் அல்லது ஊர்காவற்றுறையிலிருந்து படகுமூலம் அனலைதீவுக்கு தாக்குதலாளிகள் வந்துள்ளார்கள். கனேடிய கடவுச்சீட்டு, கனேடிய டொலர் மற்றும் இலங்கைப் பணத்தை மட்டுமே கொள்ளையடித்துள்ளனர். தாக்குதலாளிகள் இதுவரை கைதாகவில்லை" என ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தேசத்தில் நிலவிய முற்பகைமை காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாகப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## நாடு முழுவதும்...

பல்வேறு தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின் கட்டண அதிகரிப்பு, மின்சாரசபை ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவை குறைத்தமை மற்றும் வருமான வரி அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சாரசபை ஊழியர்கள் நேற்று (27) சுகயீன வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

**நேற்றும் கொழும்பில் ஆர்ப்பாட்டம்**

இலங்கை மின்சார பொது சேவை சங்கத்தின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொடர்புடைய 15 தொழிற்சங்கங்களுக்கு சொந்தமாக சேவையாளர்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கொழும்பு, கோட்டையில் அமைந்திருக்கும் மின்சாரசபை தலைமை அலுவலகத்துக்கு அருகில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நாளை மாபெரும் தொழிற்சங்க நடவடிக்கை**

இந்நிலையில், நாளை முதலாம் திகதி பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதால் மருத்துவ துறைசார்ந்து பல்வேறு முக்கிய தீர்மானங்கள் இன்று எடுக்கப்படவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முக்கியஸ்தர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

இதேவேளை, மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காகவே கலந்துரையாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும், இருந்தபோதும் தமது கோரிக்கை குறித்து அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தாமலிருந்தால் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளதாக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

தொழிற்சங்கங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தீவிரமடைந்தால், மருத்துவம், மின்சாரம், கல்வி, வங்கி, துறைமுகம், கப்பல் துறை, வருமான வரித் திணைக்களம் என சகல துறைகளும் முடங்கும் என்று எச்சரிக்கை விடுப்பதாகவும் தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன. பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## போராட்டத்...

இந்த விடயம் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன், குறித்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## தேர்தல்...

அனுப்பி வைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்தும் விவகாரத்தில் தலையிடுமாறு கோரி கடந்த 24ஆம் திகதி ஒன்றுகூடிய தேர்தல் ஆணைக்குழுவினால் சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது.

இதேவேளை, தேர்தலை நடத்தும் திகதி குறித்து எதிர்வரும் 03ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய கூட்டணி...

தமது கொள்கைகளில் பயணிக்க முடியுமென ஜனாதிபதி நம்புகிறார். அத்தோடு, பாராளுமன்றத் தேர்தலின்போது தனது தலைமையில் பலம்வாய்ந்ததொரு கூட்டணியொன்றின் ஆதரவையும் திரட்ட ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்த திட்டத்தின் ஊடாக தற்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்தி, மொட்டு கட்சியின் உறவை கைநீட்டும் அளவில் பேணிக்கொண்டு முழுமையானதொரு ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் ஒரு ஆட்சியை அமைக்க வேண்டுமென்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனம் மாத்திரமே கிடைத்திருந்ததால் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கையை விட கூட்டணியை பலப்படுத்தும் நடவடிக்கையிலேயே ஜனாதிபதி அதிக நாட்டம் கொண்டுள்ளார்.

இதை கருத்திற்கொண்டே நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியொன்றை உருவாக்கும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலருடன் இணைந்து பாரிய கூட்டணியொன்றை அமைக்கவுள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளருடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவை போன்று தனக்கும் ஐக்கிய மக்கள் சக்தியை உடைக்க வேண்டும் என்ற ஆசை இல்லை என்றும், அரசாங்கத்திற்கு வந்ததும் மேலும் சிலரை அழைத்து வர விரும்புவதாகவும், ஆனால் அதனை செய்ய வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாகவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு வர விரும்புவோரை அழைத்துக்கொண்டு நமது அரசியல் பயணத்தை தொடருவோம் என ஜனாதிபதியிடம் கூறியதாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## கடற்றொழிலாளர்கள்...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வடக்கு கடற்பகுதியில் அனுமதி பெற்று இந்திய கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கலாம் என்று தெரிவித்த கருத்துக்கு வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை மற்றும் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்கின்றன. இதனால் இரண்டு நாடுகளின் நட்புறவில் பாதிப்பு ஏற்படக்கூடும்.

எனவே, இலங்கை மற்றும் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு விரைந்து நிரந்தரத்தீர்வு காண வேண்டும்.

இரு நாட்டு கடற்றொழிலாளர்களினதும் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு வடக்கிலும், தமிழகத்திலும் பலர் அரசியல் ஆதாயம் தேடுகின்றனர். கடற்றொழிலாளர்கள் வாழ்வில் எவரும் விளையாடக்கூடாது. நீங்கள் என்னிடம் கேட்ட விடயம் பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பில் அமைச்சரவை முடிவு எடுக்கும்.

அதனை பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அந்தத் தீர்மானம் அமையும் என தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித்...

அதற்கமைய, இன்னும் இரு வருடங்களுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பெவ்ரல் அமைப்பு) தெரிவித்துள்ளது.

எனவே, அரசாங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு இடமளிக்காமல், தேர்தலை நடத்துவது குறித்து இருக்கும் நடைமுறை பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் யோசனையொன்றை முன்வைக்க சகல அரசியல் கட்சிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பரிந்துரை செய்வதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். கொழும்பில் நேற்று (27) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்துக்கே நிதி தொடர்பான அதிகாரம் இருக்கிறது. இதுதொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெளிவான உரையொன்றையும் நிகழ்த்தியிருந்தார். தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாவை விடுவிக்கும் யோசனையொன்றை நிறைவேற்றுமாறும் அவர் அறிவித்திருந்தார். நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கான அதிகாரத்தை உதாசீனப்படுத்தி, தேர்தலுக்கான நிதியை விடுவிக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து காலந்தாழ்த்தி வருகிறார்.

அதனால், பாராளுமன்றத்துக்கு இருக்கும் நிதி அதிகாரம் தொடர்பில் மீண்டும் வலுவாக்குவதற்காக, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து யோசனையொன்றை முன்வைக்க வேண்டும்.

மார்ச் மாதம் 20ஆம் திகதியாகும்போது உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் நிறைவடைகின்றது. அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரிகளின் வசமாகிவிடும். மாகாண சபைகளிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலைமையே நிலவுகிறது. அதேபோன்று, பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அவ்வாறாயின், ஆட்சி செயற்பாடுகள் தனி நபரொருவரை மையப்படுத்தி அமைந்துவிடும். திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் காலந்தாழ்த்தப்பட்டால், மீண்டும் வேட்புமனுத் தாக்கலொன்றை நடத்துவதற்கான சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கிவிடும். அதேபோன்று, எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவு செய்து, அந்த அறிக்கையின் பிரகாரம் வேட்புமனுத் தாக்கலை மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. திகதி குறிப்பிடப்படாமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலந்தாழ்த்தப்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

மீளாய்வுக் குழுவும், எல்லைநிர்ணய அறிக்கையும் தேர்தலை அடியொட்டி நிச்சயமாக முன்னெடுக்கப்படலாம். மீளாய்வுக் குழுவின் செயற்பாடுகள் காலந்தாழ்த்தப்படலாம். மேலும், மீளாய்வு செயற்பாடுகளின்போது தேர்தல் முறைமை மாற்றியமைப்பதற்கான யோசனையும் முன்வைக்கப்படலாம்.

இதுவரையில் சட்டத்துக்கு அப்பால் காலந்தாழ்த்தப்பட்டு வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல், சட்டத்தினூடாக மேலும் இரு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கான செயற்பாடுகள் இதனூடாக முன்னெடுக்கப்படலாம். இவ்வாறானவொரு நிலைமையே தெளிவாக தெரிகிறது.

அநீதியான முறையில் மக்களின் வாக்குரிமை பறிக்கப்படுவதற்கு எதிராக சகல மக்களும் ஒன்றுபடவேண்டும். அதேபோன்று, தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாற்றுத் தெரிவுகள் எதுவும் இல்லை. தேர்தலை நடத்துவதற்காக இன்னுமொரு திகதியை ஆணைக்குழு அறிவித்தாலும், மீண்டும் தேர்தல் காலந்தாழ்த்தப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவைக்கு இருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது. ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு இருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதி கூறுவதுபோன்று அவருக்கு இந்தவிடயத்தில் அதிகாரம் எதுவும் இல்லை. ஆணைக்குழுக்களுக்கு தான் உறுப்பினர்களை நியமிப்பதாக ஜனாதிபதி சபையில் அறிவித்திருந்தார். அவரின் கருத்து தவறானதாகும். துரதிர்ஷ்டவசமாக, ஜனாதிபதியின் கருத்து தவறானது என்பதை சுட்டிக்காட்ட சபையில் யாரும் இருக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும் என்றார்.

## ஐக்கிய மக்கள்...

பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனுவை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது இதன்படி எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி குறித்த மனு பரிசீலனைக்கு அழைக்கப்படவுள்ளது.

மனுவை மார்ச் 09ஆம் திகதிக்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு**

இந்த மனு நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று (27) காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நிதியமைச்சின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் இதன் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தீர்ப்பின் மூலம் பிரதிவாதிகள் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று அறிவிக்கும் நீதிமன்ற உத்தரவு, மனுவின் மூலம் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு வந்த...

கட்டளை அதிகாரி கொமாண்டர் பிரணவ் ஆனந்த் மேற்கு காலை மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித்தார்.

மேலும், காலி தியகிதுல்கந்த ஆரம்பப் பாடசாலையின் சிறுவர்கள் குழுவொன்று கப்பலுக்கு வருகை தரவுள்ளதுடன், இந்திய கடற்படையினரால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை அந்த சிறுவர்களுக்கும் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், இரு கடற்படையினருக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சில சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவதற்கும் இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளில் கப்பலின் பணியாளர்கள் பங்கேற்பார்கள்.

தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, 'ஐ.என்.எஸ் சுகன்யா' மார்ச் 01 ஆம் திகதி இலங்கையை விட்டுப் புறப்படவுள்ளது. மேலும் கொழும்பில் இருந்து இலங்கை கடற்படையின் கப்பலுடன் கடற் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தலுக்கான...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் இன்று (28) இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை பெற்றுக்கொடுக்க தலையிடுமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஏற்கனவே கடிதமொன்று அனுப்பப்பட்டது.

இக்கடிதம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திர மக்கள் கூட்டணி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில், சபாநாயகர் தலைமையிலான விசேட கலந்துரையாடல் இன்று (28) காலை 11 மணியளவில் பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் இடம்பெறவுள்ளது.

## தேசிய கியூ.ஆர்...

என்றும் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (27) தெரிவித்துள்ளார். இதுவரையில், ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டை படிப்படியாக அதிகரிப்பது குறித்து பகுப்பாய்வு செய்யவுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அடுத்த சில மாதங்களில் நிதி அமைச்சு மற்றும் பிற பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கியூ.ஆர். முறையினூடாக எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாட்டை ஏப்ரல் 10ஆம் திகதி முதல் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று (27) அறிவித்திருந்தது. இதற்கு பதிலளித்து ட்விட்டர் பதிவொன்றை இட்டே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறுவர் இல்லத்தில்...

11 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி மருத்துவப் பரிசோதனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளமையும் தெரியவந்தது.

கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகக் கூறப்படும் சிறுமியொருவர் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்ததாகவும், 18 வயது நிறைவடைந்ததையடுத்து அவர் சிறுவர் இல்ல பொறுப்பாளரின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுவர் இல்ல பொறுப்பாளரின் கணவர் அவ்வப்போது சிறுவர் இல்லத்துக்கு வந்துசென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மார்ச் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## அரசாங்க...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எனக்கு எந்த அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை. கடந்த வியாழக்கிழமை வாக்கெடுப்பொன்றை நடத்தியே அரசாங்கக் நிதிக் கணக்குக்குழுவின் தலைவராக என்னை தெரிவு செய்தார்கள். இந்த நியமனம் குறித்து கட்சிக்குள் பொதுவான இணக்கப்பாடு இருக்கிறதா என்பதை வெள்ளிக்கிழமை அவதானித்திருந்தேன். இருந்தபோதும், சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நான் கொழும்பில் இருக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடனும் தொலைபேசியில் கலந்துரையாடியிருந்தேன். கட்சிக்குள் பிளவு ஏற்படுமாக இருந்தால், பொது இணக்கமொன்று இல்லை என்றால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த பதவியை இராஜினாமா செய்ய தயாராக இருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அறிவித்திருந்தேன். எமது பயணம் இத்துடன் நிறைவடையப்போவதில்லை. எதிர்கால பயணத்தை ஒற்றுமையாகவே முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அறிவித்திருந்தேன். நான் அச்சுறுத்தல்களுக்கு பயங்கொள்பவனும் இல்லை. சேறுபூசுபவர்களுக்கு பயங்கொள்பவனும் இல்லை. நான் காமினி திசாநாயக்கவின் மகன். எனது தந்தையின் பாதையில் பயணிக்கவே எதிர்பார்க்கிறேன். கட்சியில் பெற்றுக்கொடுக்கப்பட்ட பொது இணக்கப்பாட்டின் பிரகாரமே, தற்போது கட்சி ரீதியாக எனக்கு வழங்கப்பட்டிருக்கும் சகல பதவிகளையும் வகிக்கிறேன்.

எனவே, சஜித் பிரேமதாசவுடன் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர் அரசாங்கக் கணக்குக் குழுவின் தலைவர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்திருக்கிறேன். பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலும் எதிர்க் கட்சித் தலைவரின் கீழ் செயற்படுவதே எனது எதிர்பார்ப்பாகும். பதவிகளும் வரப்பிரசாதங்களும் எனக்கு பெரிதல்ல. பதவிகளை இராஜினாமா செய்வதால் எனக்கு எந்த தாக்கமும் ஏற்படப்போவதில்லை.

யார் என்ன சொன்னாலும் நான் எனது சொந்த அறிவின் அடிப்படையிலேயே செயலாற்றுவேன் என்பதை, எனக்கு எதிராக பேசும், எனக்கு எதிராக ட்விட்டர் பதிவுகளை இடுபவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்றும், ஆளுங்கட்சியுடன் ஒப்பந்தம் செய்தோ, ஜனாதிபதிக்கு கைபேசியில் பேசியோ இந்த பதவியை பெற்றுக்கொள்ளவில்லை. அவசர நிதி சட்டங்கள் எதுவும் விசாரணைக்கு வரும் என்பதாலேயே முதலாவது கூட்டத்தில் பங்குபற்றினேன். பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே பதவியை பெற்றுக்கொண்டேன் என்பதை அனைவரும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

அன்றும் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் மாத்திரமே இருந்தார்கள். எதிர்த்தரப்பினர்கள் கலந்துகொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றார்.

# முன்னாள் காதலியை மிரட்டிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது



மாலபே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது பொலிஸ் காதலியை அச்சுறுத்திய குற்றச்சாட்டின்பேரில் எம்பிலிபிட்டிய பொலிஸாரால் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் எம்பிலிபிட்டிய பொலிஸில் கடமையாற்றும் பெண் கான்ஸ்டபிள் ஒருவரை காதலித்து வந்துள்ளார். பொலிஸ் காதலி கடந்த வாரம் காதலை துண்டித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த பொலிஸ்காரர், எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி அழைப்பேற்படுத்தி, அங்கிருந்த பல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

சனிக்கிழமை அவர் தனது காதலியின் எம்பிலிபிட்டிய பொலிஸ் குடியிருப்புக்கு வந்து, கதவை உடைத்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதையடுத்து, அங்கு வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்கவில் பொலிஸாரால் கைதான நபரொருவரை தப்பிச்செல்ல வைத்த பிக்குகள் இருவர் உள்ளிட்ட மூவர் கைது



கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருந்த, பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவரை மீட்டு அழைத்துச் சென்றதாக குறிப்பிடப்படும் தேரர்கள் இருவரும் கார் சாரதியொருவரும் ஹெட்டிபொல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக மேல்மாகாணத்தின் தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களான தேரர்கள் இருவரும், இந்த சம்பவத்துக்காக பயன்படுத்திய காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹெட்டிபொல, ரிட்டாதெனிய விகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

11 வயதுடைய தேரர் ஒருவர் அவரின் பாதுகாப்பு நலன்கருதி பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட காரில், டுபாய்க்கு தப்பிச்செல்வதற்காக வருகை தந்திருந்த சந்தேகநபருக்கு சொந்தமான இரு பயணப் பொதிகளும் இருந்துள்ளன. அந்தப் பொதிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் கடற்படைப் பிரதானி சந்திப்பு



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கடற்படைப் பிரதானி அட்மிரல் முஹம்மட் அம்ஜத் கான் நியாஸி (Muhammad Amjad Khan Niazi) நேற்று (27) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கடல்சார் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் நடவடிக்கைகளை பரந்தளவில் மேலும் மேம்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பை அடையாளப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் கடற்படைப் பிரதானி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை கடற்படைப் பிரதானிகள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** – மனதில் ஒருவித குழப்பநிலை இருக்கும், காரிய தடை தாமதங்கள் ஏற்படும்.

**ரிஷபம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், மனோ தைரியத்துடன் காரியங்களை சாதிக்கலாம்.

**மிதுனம்** – வெளியிடத்தில் அவமானமடைய நேரிடலாம், தேவையற்ற பயணங்களால் உடல் அசதி ஏற்படும்.

**கடகம்** – உங்கள் மூத்த சகோதரரிடமிருந்து உதவிகள் கிடைக்கும், தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்கள் உண்டு.

**சிம்மம்** – தொழில் ரீதியில் அனைத்தையும் சாதிப்பீர்கள், திட்டமிட்ட காரியங்களில் வெற்றி ஏற்படும்.

**கன்னி** – சகோதர வகையினரால் பகைகள், எதிர்ப்புகள் ஏற்படும், சொத்துகளை இழக்க வேண்டிவரும்.

**துலாம்** – கடுமையான அலைச்சல்களால் அல்லலுறுவீர்கள், கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**விருச்சகம்** – கூட்டு வியாபாரத்தால் அதிக இலாபங்களை அடைவீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**தனுசு** – கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள், வழக்கு விவகாரங்களில் வெற்றி உங்களுக்கே.

**மகரம்** – குழந்தைகளால் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும், தொழில் ரீதியில் சிக்கல்கள் உண்டு.

**கும்பம்** – வாகனப் பயணங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது, தாயின் உடல் நிலையில் அக்கறை செலுத்துங்கள்.

**மீனம்** – இளைய சகோதர வகையினர் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள், நண்பர், உறவினர் ஆதரவு உண்டு.

| | |
|---|---|
| **திதி** | நவமி பி.இ.4.19 வரை பின் தசமி |
| **நட்சத்திரம்** | ரோஹிணி மு.ப.7.19 வரை பின் மிருகசீரிடம் |
| **யோகம்** | அமிர்தசித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| **வார சூலை** | மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | மு.ப. 8.26 – 9.26 மணி வரை |
| **ராகு காலம்** | 3.26 – 4.56 மணி வரை |
| **எமகண்டம்** | 9.26 – 10.56 மணி வரை |
| **குளிகை** | 12.26 – 1.56 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | ரோஹிணி, அத்தம். திருவோணம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | ----------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**



வடகடல் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் வீரவில வலை உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றின் பணியாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் பணியாளர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

# மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நான்கு வயது சிறுமி உயிரிழப்பு

மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த 4 வயது சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். புத்தூர் கிழக்கு - ஊறணி பகுதியைச் சேர்ந்த அஜிந்தன் லக்ஸ்மிதா (வயது 4) என்ற சிறுமி கடந்த சிவராத்திரி தினத்தன்று திடீரென வாந்தி எடுத்து சுகயீனமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலை சேர்க்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளின் பின்னர் சிறுமியின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# விவசாய அமைச்சுக்குள் விசேட புலனாய்வுப் பிரிவு



விவசாய அமைச்சுக்குள் விசேட புலனாய்வுப் பிரிவொன்று அமைக்கப் படவுள்ளது. விசேட புலனாய்வுப் பிரிவொன்று இல்லாத காரணத்தினால் குறித்த பிரிவை நிறுவுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சுக்குள் 13 மேலதிக செயலாளர்கள் பணி புரிவதாக அமைச்சு குறிப்பிட்டதோடு, சிலர் விவசாய மற்றும் நிர்வாக சேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் தலைமையில் அதிகாரிகளுக்கு கடமைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் உட்பட அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அதிகாரிகள், ஊழியர்களிடம் தெரிவிக்கப்பட்ட சில முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான பிரிவு இல்லாதது மிகவும் கவலைக்குரியது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே, இதற்கு மாற்றாக அமைச்சில் தற்போது மேலதிக செயலாளர் மற்றும் தேவையான பணியாளர்களை நியமித்து பிரிவை நிறுவுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# கம்பளையில் 11 வயது சிறுமி துஷ்பிரயோகம்

(கலஹா நிருபர்)

11 வயது சிறுமியை அச்சுறுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 44 வயது நபரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா உத்தரவிட்டார்.

இதன்போது கம்பளை ஹெட்காலை சாக் கம்மான கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சிறுமியின் தாயின் பிறந்த நாள் கொண்டாடுவதற்காக பொருட்கள் வாங்க சிறுமி கடைக்கு போய் வந்த சந்தர்ப்பத்திலேயே, சிறுமியின் அயல்வீட்டில் வசிக்கும் சந்தேக நபர் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். அதன்பின் பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்ந்து அச்சுறுத்தி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில், குறித்த சிறுமி பாடசாலையில் சோர்ந்து காணப்பட்டதையடுத்து வகுப்பு ஆசிரியை வினவியபோதே குறித்த விடயம் தெரியவந்துள்ளது. இதையடுத்து சிறுமியின் தாய் வரவழைக்கப்பட்டு, சிறுவர் பாதுகாப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் கம்பளை ஹெட்காலை பொலிஸாரினால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே மேற்கண்ட உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.





மின்கட்டண அதிகரிப்பு மற்றும் வருமானவரி அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபை ஊழியர்கள் நேற்று (27) மின்சார சபை அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசாங்கம் மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடி தீர்க்க வேண்டும்

## சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டம் உட்பட வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசு மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாறாக மீனவர்களின் வாழ்வியலை சீர்குலைக்கும் நிலைக்கு இட்டுச்செல்லக் கூடாதென மன்னார் மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டம் உட்பட வட மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று (27) காலை 11 மணியளவில் மன்னாரில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இணைப்பாளர் தயாளன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிக் குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.



இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் மன்னார் மண்ணையும், மன்னாரில் உள்ள வளத்தையும் சுரண்டிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் மக்களின் வாழ்வாதாரத்தையும், மக்களின் எதிர்காலத்தையும் அழிக்கின்ற ஒரு செயற்பாடாக இன்றைய சூழ்நிலை காணப்படுகிறது.

காற்றாலை என்ற பெயரில் மன்னாரின் தீவுப்பகுதியில் பல அழிவுகரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

முக்கியமாக மன்னாரில் வாழ்வாதாரத்திற்காக மீனவர்கள் கடல் தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த மீனவர்களின் கடல் தொழில் நடவடிக்கைகளுக்குப் பாரிய அச்சுறுத்தல்களாக காற்றாலை என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எனவே, காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மன்னார் தீவு பகுதியில் இல்லாமல் மக்கள் பயன்படுத்தாத பல இடங்கள் அருகில் இருக்கின்றன.

அந்த இடங்களில் காற்றாலைகளை அமைக்கின்றபோது மீனவர்களின் பிரச்சினைகளும், வாழ்வியல் பிரச்சினைகளும் இல்லாமல்போகும். நாங்கள் அபிவிருத்திக்கு தடையானவர்கள் இல்லை. எனினும், மக்களின் வாழ்வியல், உரிமை, தொழில் பாதிக்கப்படும் வகையில் உள்ள இந்தக் காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்.

மேலும் எமது மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில், அயல் நாட்டு மீனவர்கள் எமது கடல் பகுதிக்கு வந்து எமது மீனவர்களின் வளத்தைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

எமது மீனவர்கள் வாழ்வாதாரத்திற்காக பாடுபட்டு வருகின்ற நிலையில், அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஒட்டுமொத்தமாக இல்லாது ஒழிக்கும் செயலாகவே காணப்படுகின்றது.

எனவே, அரசாங்கம் மீனவர்களின் விடயத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, பெப்ரவரி 28ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# வடக்கு மீனவர்களின் கோரிக்கை கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்!

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதியளிக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சமாசங்களின் சங்கங்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டு, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 23க்கும் மேற்பட்ட சமாசங்களின் சங்கங்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தன.

''கடந்த பல வருடங்களாக இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் தொடர்பாக கடற்றொழில் சமூகம் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், கடந்த ஆட்சிக் காலத்தில் தாங்கள் பிரதமராக பதவி வகித்த காலப்பகுதியில் 2016ஆம் ஆண்டு அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை மீனவர் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி முன் கொண்டு சென்று நிரந்தரத் தீர்வை வழங்குவீர்கள் என நாம் எதிர்பார்த்தோம்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக கருத்து தெரிவித்திருந்தார். இந்த நடைமுறை எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய இழுவைப் படகுகளால் எங்களுடைய கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு பல கோடி ரூபா சொத்துகள் அழிக்கப்பட்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்ல முடியாமல் உள்ளது. எனவே, எமது கடற்பகுதியில் இந்திய மீனவர்களை அனுமதிக்கும் திட்டம் தொடர்பாக ஜனாதிபதியுடன் நேரில் சந்தித்து கலந்துரையாட ஆவலாக உள்ளோம். எனவே, இலங்கையில் உள்ள கடற்பகுதியை வெளிநாட்டு கடற்றொழிலாளர்கள் அழிப்பதைத் தடுக்குமாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் சார்பாக நாங்கள் ஜனாதிபதியை வேண்டி நிற்கின்றோம்'' என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களது படகுகளை இலங்கை கடற்பகுதிக்குள் அனுமதித்து ஏதேனும் கட்டணத்தை அறவிட்டோ அல்லது வேறு எந்த அடிப்படையிலோ அவர்களுக்கு இங்கு மீன்பிடிக்கும் அனுமதியை வழங்கினால் இலங்கை மீனவர்களின், குறிப்பாக வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்பட்டு விடும் என்பதில் இருவேறு கருத்தில்லை.

தமிழகத்துடன் வடக்கு மாகாண மக்கள் நெருங்கிய உறவுகளை கலை, கலாசார ரீதியில் கொண்டிருந்தாலும், இந்த மீன்பிடித்தொழில் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால் அதில் சமரசம் செய்துகொள்ள முடியாத நிலைமையே இருக்கிறது. நாடு இருக்கும் நிலைமையில், பணம் கிடைக்கிறது என்பதற்காக எதையும் செய்துவிட அனுமதியளிக்கலாம் என்று அரசாங்கம் கருதுமாயின் அது நாட்டின் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல. நாடு பொருளாதார முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஒட்டுமொத்த நாட்டையே விற்கலாம் என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

வடக்கு கடற்பகுதியில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களை அனுமதிப்பதன் மூலம் வடக்கையும், தமிழகத்தையும் மோதவிட்டு இரசிக்க இலங்கை முயல்வதாக தெரிகிறது. அந்த இரசனை ஆபத்துக்குரியது. இரு நாட்டுக் கடல் எல்லைகள் தொடர்பில் முறையான அறிவுறுத்தல்கள், ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். அதனை விடுத்து வடபகுதி மீனவர்களின் வயிற்றில் அடித்து அவர்களை தமிழக மீனவர்களுடன் மோதவிட்டு அழகுபார்க்கும் நரி வேலைகளை ரணிலின் அரசு செய்யக்கூடாது.

எனவே, இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதியளிக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண கடற்தொழிலாளர் சமாசங்களின் சங்கங்கள் இணைந்து விடுத்துள்ள கோரிக்கையை ஜனாதிபதி ரணில் பரிசீலனை செய்து ஆக்கபூர்வமான தீர்மானத்திற்கு வரவேண்டும். இதை வைத்துக்கொண்டு அரசியல் செய்யக்கூடாது ரணில்.

# யாருக்கு இடையிலானது உக்ரைன் போர்?



வரலாற்றில் இதுவரை நிகழ்த்தப்பட்ட எல்லா போர்களின் நோக்கமும் ஒன்றுதான்: அமைதி. ஆனால், அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிய போரை, இதுவரை மக்கள் கண்டதில்லை. "எங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தினால்தான் உக்ரைனில் அமைதி சாத்தியம் என்றால், அதற்குத் தயங்க மாட்டோம்" என்கிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின். "நாங்கள் கேட்கும் உதவிகளை மேற்குலகம் விரைந்து அளித்தால் ரஷ்யாவை முறியடித்து அமைதியை நிலைநாட்டி விடலாம்" என்கிறார் உக்ரைன் ஜனாதிபதி ஸெலன்ஸ்கி.

### ரஷ்யாவின் தார்மீகத் தோல்வி

மேற்குலகம் உக்ரைனுக்கு ஆயுதங்களை அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டே இருந்தால் போர் நீண்டுகொண்டே போகுமே ஒழிய, நிற்காது என்கின்றனர் சர்வதேச அரசியல் நோக்கர்கள். தொடர்ந்து தோற்றுக்கொண்டிருக்கும் ரஷ்யா, தனது பழம்பெருமிதக் கனவுகளிலிருந்து விழித்துக்கொள்ளாவிட்டால் மீளாத இருளில் மாட்டிக்கொள்ளும். ரஷ்யாவை அழித்தவர் என்னும் பெயர்தான் புட்டினுக்கு எஞ்சும் என்கிறார்கள் மேற்குலகின் அரசியல் கோட்பாட்டாளர்கள்.

உக்ரைனை மீட்பதற்காக மேற்கொள்ளப்படும் 'சிறப்பு இராணுவ நடவடிக்கை' என்னும் அறிவிப்போடு கடந்த ஆண்டு பெப்ரவரி 24 அன்று இப்போரைத் தொடங்கிவைத்தார் புட்டின். சுண்டைக்காய் நாடு. நசுக்கிவிட்டுத் திரும்பிவிடலாம் என்னும் நம்பிக்கையோடு



கிட்டத்தட்ட 2 இலட்சம் வீரர்கள் உக்ரைனுக்குள் ஊடுருவினர். சில பகுதிகளை அவர்களால் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவரவும் முடிந்தது.

மார்ச் இறுதியில் உக்ரைன் சுதாரித்துக்கொண்டு தடுப்பாட்டத்தைத் தொடங்கியது. வடக்கிலும் தெற்கிலும் ரஷ்யர்களை எதிர்கொண்டு வெற்றிபெற்றதோடு, இழந்த பகுதிகள் சிலவற்றையும் அந்நாடு மீட்டெடுத்துவிட்டது. அத்துடன் ரஷ்ய வீரர்கள் நிகழ்த்திய போர்க் குற்றங்களையும் வெளிச்சம்போட்டுக் காட்டிவிட்டது.

### வலுப்பெறும் உக்ரைன் தேசியம்

உக்ரைனியர்கள் ரஷ்யாவின் பண்பாட்டுத் தாக்கத்துக்கு உள்ளானவர்கள். ரஷ்யா ஓர் அந்நிய நாடாக அவர்களுக்கு இருந்ததில்லை. 1945 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தது உக்ரைன்.

சோவியத்தின் உடைவுக்குப் பிறகு சுதந்திரமான, நடுநிலை நாடாக உக்ரைன் மாறியது என்கிற போதிலும், ரஷ்யத் தாக்கங்களிலிருந்து முழுக்க விடுபட்டுத் தனித்ததொரு உக்ரைனிய அடையாளத்தை அவர்கள் உருவாக்கிக்கொள்ளவில்லை. அதற்கான அவசியத்தை புட்டின் அவர்களுக்கு வலுவாக உணர்த்திவிட்டார்.

புட்டினின் இந்தப் போர், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உக்ரைனை ஒன்றிணைத்திருக்கிறது. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள டோன்பாஸில் இருந்த ரஷ்ய ஆதரவாளர்களில் கணிசமானவர்கள் இன்று உக்ரைனிய தேசியவாதிகளாக மாறியிருக்கின்றனர். அணு ஆயுதப் பலசாலியான ரஷ்யாவால் இன்றுவரை போரில் வெல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணம், பலம்பெற்றுவரும் இந்த உக்ரைனிய தேசியவாத உணர்வுதான்.

### வெறுப்பின் இலக்கான ரஷ்யா

ஐ.நா. புள்ளிவிவரங்களின்படி பெப்ரவரி 13 வரை குறைந்தது 7,200 பேர் உக்ரைனில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். குறைந்தது 200 குழந்தைகள் இறந்துபோயிருக்கலாம். அதிகாரபூர்வ தகவல்கள் இல்லை என்பதால் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் இருதரப்பிலும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம். இலட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்குத் தங்கள் நாட்டை நேசிக்கிறார்களோ கிட்டத்தட்ட அதே அளவுக்கு ரஷ்யாவை இன்றைய உக்ரைனியர்கள் வெறுக்கிறார்கள்.

### சிதைந்த பிம்பம்

ஸெலென்ஸ்கியின் பிம்பம் பன்மடங்கு வளர்ந்து நிற்கிறது என்றால், புட்டினின் பிம்பம் கடுகாகச் சிறுத்துக்கிடக்கிறது. புதிதாக எதுவும் கிடைக்கவில்லை என்பதோடு, இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கிறார். ஒரு சிறு ஏற்றமாவது கிடைக்காதவரை, ஒரு கீற்று வெளிச்சமாவது தன்மீது விழாதவரை அவர் இப்போரை நிறுத்துவதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

போர்க்களத்தைப் பொறுத்தவரை முழு வெற்றி மட்டுமே வெற்றி என்பதால், கிரைமியா உட்பட அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ரஷ்யாவின் ஆதிக்கத்தை முறியடிக்காதவரை உக்ரைனைச் சுதந்திர நாடாக அழைக்க முடியாது என்பதை ஸெலென்ஸ்கியும் உணர்ந்திருக்கிறார்.

தன் முழு பலத்தையும் திரட்டிக்கொண்டு ரஷ்யா அடியெடுத்து வைத்தால் உக்ரைன் தாங்காது என்பதையும் அவர் அறிவார். அதனால்தான் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் உரத்த குரலில் அவர் மேற்குலகிடமிருந்து உதவிகளைக் கேட்ட வண்ணம் இருக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது ஐரோப்பியப் பயணத்தின்போது திடீரென உக்ரைன் சென்று ஸெலென்ஸ்கியைச் சந்தித்திருக்கிறார். ரஷ்யாவுக்கு இதுவரை தார்மிக ஆதரவை வழங்கிவரும் சீனா, இனி ஆயுத உதவிகளையும் வழங்கலாம் என அமெரிக்கா எச்சரிக்கிறது.

### பனிப்போரின் நீட்சி:

மேற்குலகம், குறிப்பாக நேட்டோவின் பாத்திரம் இந்தப் போரை மேலும் சிக்கலானதாக மாற்றிவிட்டது. நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கித் தன் பரப்பை விரிவாக்கிக்கொண்டே போவதை ரஷ்யாவுக்கான எச்சரிக்கை மணியாகவே புட்டின் பார்க்கிறார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி உக்ரைனில் தன் இராணுவக் கூடாரத்தை அமைப்பதே நேட்டோவின் இலக்கு. இதை அனுமதித்தால் நாளை ரஷ்யாவின் இருப்புக்கே ஆபத்து நேரலாம் என்கிறார் புட்டின். நேட்டோவில் சேர முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா கோபம் கொண்டதன் பின்னணியும் இதுதான்.

உக்ரைனை நேட்டோ உறுப்பினராக்கும் எண்ணமோ அங்கே இராணுவத்தை நிறுத்தும் எண்ணமோ இல்லை என்கிறது நேட்டோ. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதும் உக்ரைனின் சுதந்திரத்தைப் பேணிக்காப்பதும்தான் எங்கள் இலக்கு என்கின்றன அமெரிக்காவும் மேற்குலகும். வெளியே சொல்லப்படும் இந்த எளிய நோக்கங்களுக்காக மட்டுமே உக்ரைனின் பின்னால் இவர்கள் அனைவரும் அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பது நம்பும்படியாக இல்லை.

### போரைத் தொடர்வது யார்?

உக்ரைன் போர் என்பது உக்ரைனுக்கான போர் அல்ல. இது பனிப்போரின் நீட்சி. அதனால்தான் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் என்று பலவும் டொலர்களை பில்லியன் கணக்கில் உக்ரைனுக்குக் கொட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இதை உக்ரைனும் பெரும்பாலும் உணர்ந்திருக்கும். வெளிப்படுத்தாவிட்டாலும் இந்த அடிப்படைப் புரிதலை அனைவரும் கொண்டிருப்பதால், இது விரைவில் முடியப்போகும் போரல்ல என்பதை அனைவரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர். எந்தவொரு போரையும்போல் இதுவும் அதில் பங்கேற்பவர்களை மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துக்கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே உள்ளவை போக புதிய கட்டுப்பாடுகளை ரஷ்யா மீது விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகிக்கொண்டிருக்கிறது. உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதிச் சங்கிலிகள் பல இடங்களில் அறுபட்டிருப்பதால் அமெரிக்கா, ஐரோப்பா தொடங்கிப் பல இடங்களில் தட்டுப்பாடு நிலவுகிறது. எப்பாடுபட்டாவது போரை நிறுத்தியே ஆக வேண்டிய கட்டாயத்துக்கு இத்தட்டுப்பாடு அனைவரையும் தள்ளிக்கொண்டிருக்கிறது.

உக்ரைனிலும் சரி, ரஷ்யாவிலும் சரி, மக்களின் விருப்பம் ஒன்றுதான். போர் முடிய வேண்டும். ஆனால், மக்களின் விருப்பத்தைப் பொருட்படுத்தாமல், புவிசார் அரசியல் நோக்கங்களுக்காகத் தலைவர்கள் போரைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையான போர் மக்களுக்கும் அவர்களை ஆளும் தலைவர்களுக்கும் மத்தியில்தான் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

- மருதன் -
நன்றி - தமிழ் இந்து

# தவக்கால சிந்தனை

## சிலுவையில்(ன்) உறவு



நம்பிக்கையின் மக்களாகிய நமக்கு, இயேசுவின் பிறப்பு, அவருடைய போதனைகள், அவர் செய்த பணிகள், அவருடைய பாடுகள், அவருடைய சிலுவை மரணம் ஆகிய அனைத்தும் இறைதிட்டத்தின் ஒரு பகுதியே. சிலுவை மரணத்தால் இயேசு நம்மை பாவத்தின் விலையாக இருந்த சாவிலிருந்து மீட்டெடுத்தார்.

"தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.''

இயேசு இவ்வுலகிற்கு வந்தது மக்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத்தர. சிலுவை மரத்தில் இதையே மன்றாட்டாக வைக்கிறார் இயேசு. தனது மரணத்தின் வழியாக மக்களுக்கு மன்னிப்பை பெற்றுத்தந்து இறை-மனித உறவைப் புதுப்பிப்பது மட்டுமன்றி, மக்களுக்காக பரிந்துபேசுபவராக, மக்களோடு தன்னை இணைத்து மக்களோடு தனக்குள்ள உறவை ஆழப்படுத்துகிறார். மக்களோடு மக்களாக, மக்களோடு தானும் ஒன்றான (பாவம் தவிர) உறவை வெளிப்படுத்துகிறார்.

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்று கூறி இவ்வுலகிற்கு தான் வந்தது மீட்புப்பணிக்காக என்பதை வெளிப்படுத்துகிறார். குற்றவாளிகளோடு ஒன்றாக சிலுவையில் துன்பப்பட்டாலும், தான் குற்றவாளியல்ல என்பதையும் அதேநேரத்தில், குற்றவாளிகளை இறைவனோடு ஒன்றிணைப்பதுவே தனது தலையான பணி என்பதையும் நிரூபித்து விடுகிறார். எனவே, பாவிகளோடு கொண்டுள்ள உறவு மீட்பர் - மக்கள் உறவு என்பதை வெளிப்படுத்துகிறார்.

இன்னும் சற்று ஆழ்ந்து சிந்திப்போமென்றால், இயேசு தன்னையே மையமாக வைத்து தனக்கு மேல் உள்ள கடவுளின் உறவு, தன்னைச் சுற்றி உள்ள மக்கள் (பாவிகள்) உறவு, மேலும், தனக்கு கீழ் உள்ள (பின் வருகின்ற) சீடர்கள் உறவு ஆகிய அனைத்தையும் ஒன்று சேர்க்கிறார், ஒன்றுபடுத்துகிறார், ஒன்றாக்குகிறார். இயேசுவில் எல்லா உறவுகளும் ஒன்றாகின்றன. சிலுவையில் தொங்கும் இயேசு சிலுவை மரணம் வழியாக உறவை (ஒரே உறவு) ஒன்றாக்குகிறார்.

# இன்றைய நாளில்...

* 1784 – ஜோன் வெஸ்லி, மெதடிஸ்த திருச்சபையை ஆரம்பித்தார்.
* 1935 – வொலஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1953 – ஜேம்ஸ் வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் ஆகியோர் தாம் டி.என்.ஏயின் வேதியியல் அமைப்பைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
* 1954 – என்.டி.எஸ்.சி. தரத்துடன் முதலாவது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனைக்கு வந்தன.
* 1997 – ஜி.ஆர்.பி.970228 என்ற மிகவும் ஒளிர்வான காமா கதிர்கள் 80 வினாடிகளுக்கு பூமியைத் தாக்கின. இதன்மூலம் காமா கதிர் வெடிப்புகள் பால் வழிக்கப்பால் நிகழ்கின்றன என எடுத்துக்காட்டப்பட்டது.
* 2007 – புளூட்டோவை நோக்கி ஏவப்பட்ட நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம், வியாழன் கிரகத்தை அண்மித்தது.
* 2013 – திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் பணி துறந்தார். 1415இல் பன்னிரண்டாம் கிரகோரி பதவி துறந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது பணிதுறப்பு இதுவாகும்.

# நக்கல் நமசிவாயம்

கியூ.ஆர்.கோட்டில தான் தொடர்ந்து எரிபொருள் வழங்குவம் எண்டா, இப்போதைக்கு பிரச்சினை தீராதுபோல என்னங்கோ..!



# இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான இறுதி மூலோபாய திட்டம் தயாரிப்பு

தேசிய கண்ணிவெடி நடவடிக்கை நிலையத்தின் காலம் மேலும் 05 வருடங்கள் நீடிக்கப்படவுள்ளது. இதன்படி, வருடாந்த கையொப்பத்தின் அடிப்படையில் இந்த தேசிய நிலையத்தின் காலத்தை 2023 முதல் 2027 வரை நீடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



மோதல் சூழ்நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதை வழிநடத்தவும், கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை நிலையம் நாட்டில் நிறுவப்பட்டது. இந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி 2002ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் தலைமையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையிலிருந்து பின்வாங்கியது, அதன் பின்னர் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை நிலையம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் 04 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இந்த நிலையத்திற்காக செயற்பட்டு வருகின்றன. இந்த அரச சாரா நிறுவனங்களில் 3000இற்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். சர்வதேச உதவி நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் செயல்முறைக்கு ஆதரவை வழங்குகின்றன. கடந்த வருடம் இதற்கென 14.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அது 17 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்ட உலக கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தின்படி, 2028ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் இல்லாத நாடாக இலங்கை மாற வேண்டும். அது தொடர்பாக 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நபர் எதிர்ப்பு கண்ணிவெடி தடைச்சட்டத்தையும் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

2010ஆம் ஆண்டு தேசிய கண்ணிவெடி நடவடிக்கை நிலையம் நிறுவப்பட்டபோது, 2020ஆம் ஆண்டளவில் அந்த அபாயத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை அகற்ற திட்டமிடப்பட்டது, ஆனால், அப்போது அடையாளம் காணப்படாத ஏராளமான கண்ணிவெடிகள் உள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டன. 2012-2017 மற்றும் 2022இல் நிரந்தரமாக ஆபத்தான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன. இது ஆய்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்டது. இதன்படி வடக்கு, கிழக்கு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக 15 சதுர கிலோமீற்றர் நிலம் எஞ்சியுள்ளது. இது தவிர, அங்கீகரிக்கப்படாத 02 சதுர கிலோமீற்றர் பரப்பளவும் நிரந்தர ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியை இலங்கை உடனடியாக முடித்துள்ளதாகவும், 2027ஆம் ஆண்டுக்குள் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான இறுதி மூலோபாயத் திட்டத்தை தயாரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறுகிறார். ஜெனிவாவிலுள்ள சர்வதேச கண்ணிவெடி நடவடிக்கை நிலையமும் இத்திட்டத்தின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது.

# கடற்றொழிலாளர்களை பாதிக்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாது

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்

இந்தியக் கடற்றொழிலாளர்கள் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதிகளை வழங்குவது தொடர்பாக தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களை பாதிக்கும் வகையிலான எவ்வாறான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



மேலும், குறுகிய சுயலாப நலன்களுக்காக சில தரப்புகள் தவறான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள கடற்றொழில் அமைச்சர், கடந்த காலங்களில் சீனாவால் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுவதாக கிளப்பிவிடப்பட்ட புரளிகள் தோற்றுப்போன நிலையில், இந்திய கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கப்போகின்றது என்ற கதைகளைக் கூற ஆரம்பித்துள்ளதாகவும், இவ்வாறான புரளிகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில்முறையை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உருகுணை பல்கலை ஒரு வாரத்துக்குப் பூட்டு

உருகுணை பல்கலைக்கழகம் எதிர்வரும் ஒருவார காலத்துக்கு மூடப்படுவதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் குழுவால் துணை வார்டன், அவரது மனைவி மற்றும் தாயார் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, உருகுணை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடம் நேற்று (27) முதல் ஒரு வார காலத்திற்கு மூடப்படவுள்ளது.

மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு பிற்பகல் 2 மணிக்குள் வெளியேறவும் நேற்று (27) உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஷாப்டரின் மரணம் குறித்து விசாரிக்க ஐவர் கொண்ட விசேட வைத்திய குழு

தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்பதை தீர்மானிக்க ஐவர் கொண்ட விசேட வைத்திய குழுவொன்றை கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய நேற்று (27) நியமித்தார்.

தடயவியல் மருத்துவத்தில் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த ஐவர் கொண்ட விசேட வைத்திய குழுவில் இரண்டு சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி, பேராசிரியர் அசேல மெண்டிஸ், பேராசிரியர் டி.சி.ஆர்.பெரேரா, பேராசிரியர் டி.என்.பி.பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ருவன்புர ஆகியோர் சம்பந்தப்பட்ட விசாரணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான நீதிவான் விசாரணை நீதிமன்றில் மீண்டும் கூடியபோதே இந்த உண்மைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான விசாரணையை மார்ச் 14ஆம் திகதி நீதிமன்றங்களில் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.



புத்தளம் இந்துக்கல்லூரி நூலகத்திற்கு ஒருதொகை நூல்களை பாடசாலை அதிபர் பீ.ஆர்.தம்பித்துரையிடம் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் வழங்குவதையும் அருகில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ.செந்தில்வேலவர், பிரதி ஆசிரியைகளான டீ.சிவதர்சன், வீ.லோகேஸ்வரி ஆகியோர் உடன் காணப்படுகிறார்கள்.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அழகுசாதனப் பொருட்களை ஏலம்விட தீர்மானம்

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 50 மில்லியன் ரூபா பெறுமதியான அழகுசாதனப் பொருட்களை ஏலம் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 4 வகையான அழகுசாதனப் பொருட்கள் இலங்கை சுங்கத்தால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இலங்கை சுங்கத்தால் கைப்பற்றப்பட்ட இந்தக் கொள்கலன்கள் இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், சீனா, சிங்கப்பூர் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தயாரிப்புகளை அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், சில தரமான அழகுசாதன தயாரிப்புகள் இருப்பதாகத் தெரியவந்தது.

எனவே, குறித்த பொருட்கள் பரிசோதிக்கப்பட்டு, இலங்கையின் தர நிர்ணயத்துக்கு உட்பட்டதென அடையாளம் காணப்படுபவை உள்ளூர் சந்தையில் ஏலம் விடப்படுமென இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

# கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) பிற்பகல் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபனம் நடவடிக்கை

உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபனம் (IFC), அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் குறுக்கு நாணய பரிமாற்று வசதியை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இலங்கையின் நாணய கையாள்கை மற்றும் ஏற்றுமதியில் 30 சதவீதத்துக்கும் அதிக பங்கை வகிக்கும் மூன்று தனியார் வங்கிகள் அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக இந்த வசதியைப் பெறவுள்ளன.

மருந்துகள், உணவு மற்றும் பசளை உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக இதனூடாக நிதியளிக்கப்படவுள்ளது.

இந்த நிதியுதவி, முதலீட்டாளர் சமூகத்தில் நம்பிக்கையை அதிகரிப்பதுடன், இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஆதரவாக புதிய மூலதன வரவுகளை ஈர்க்கும் எனவும் தாம் எதிர்பார்ப்பதாக தெற்காசியாவுக்கான நிதியியல் நிறுவகங்கள் குழுமத்தின் சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபன முகாமையாளர் ஜூன் பார்க் தெரிவித்துள்ளார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி மூவர் கொலை

கூரிய ஆயுதத்தால் தாக்கி மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் வெவ்வேறு பகுதிகளில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ரத்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓவகந்த பகுதியில் இரண்டு பெண்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காதல் உறவில் ஏற்பட்ட தகராறு காரணமாக நேற்று முன்தினம் (26) இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவர் தனது வீட்டில் இருந்தபோது, அவரது தாயாரின் இளைய சகோதரர் வீட்டிற்கு வந்து இறந்தவரையும் அவரது தாயாரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

ரத்கம பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலையை செய்த சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லந்தோட்ட பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

லந்தோட்டை அம்பலாங்கொட பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தனது வீட்டிற்கு அருகில் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, பலர் வந்து கூரிய ஆயுதங்களால் தாக்கியதில், பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார்.

பழைய முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடந்துள்ளது.

மேலும், திவுலபிட்டிய மரதகஹமுல சந்திக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மரதகஹமுல சந்திக்கு அருகில், வீதியில் பயணித்த காரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தடுத்து நிறுத்தி, கார் சாரதியை கூரிய ஆயுதத்தால் தாக்கியதுடன், காரில் இருந்த ஒருவரை இரும்புக்கம்பியால் தாக்கியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், வெட்டுக் காயங்களுக்குள்ளான நபர் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நேற்று முன்தினம் (26) பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 49 வயதான வித்தினாபஹா என்பவரே உயிரிழந்துள்ளார்.

# ஆடை விற்பனை நிலையத்தில் தீப்பரவல்

மொரட்டுவை நகரிலுள்ள பரிசுப் பொருட்கள் மற்றும் ஆடை விற்பனை நிலையத்தில் நேற்று (27) அதிகாலை திடீரென தீ பரவியதால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை என்பதுடன், வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மின்கலங்களிலிருந்து தீ பரவியிருக்கலாம் என தீயணைப்புப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 27.02.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 2 | 138 518 |
| கனேடியன் டொலர் | 150 4010 | 161 316 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 3731 | 42 4 22 |
| யூரோ | 264 7707 | 28 3126 |
| ஜப்பான் யென் | 1 505 | 1 6063 |
| சிங்கப்பூர் டொலர் | 152 5834 | 163 2026 |
| ஸ்ரேலிங் பவுன் | 315 151 | 330 6085 |
| சுவிஸ் பிராங் | 266 5411 | 283 1207 |
| ஐ.அ.டொலர் | 247 2510 | 256 8173 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 850 36 1 |
| குவைட் | குவைட் தினார் | 0,07 4344 |
| ஓமான் | ஓமான் றியால் | 830 4 40 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 511 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5036 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 58 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.02.26
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5043 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 41,102,782.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 5 0 9 8 0 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3285 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,073,276.80
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 02 26 32 47

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1498 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 0 6 1 4 3 2

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1073 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,367,192.00
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 19 24 38 61

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 352 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,617,948.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 32 35 52 55 — விசேட இலக்கினம் துலாம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1391 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 303,265,230.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 08 19 39 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வட்டவளை பெரிய காண்டியம்மன் கோவில் பாரம்பரிய பொன்னர் சங்கர் கூத்து திருவிழா







(கினிகத்தேனை நிருபர்)

வட்டவளை மீனாட்சி தோட்ட பெரிய காண்டியம்மன் கோவிலின் பாரம்பரிய பொன்னர் சங்கர் கூத்துடன் தொடர்புடைய வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் (26) இடம்பெற்றது.

இதன்படி கடந்த சனிக்கிழமை (25) இரவு மகா முனிக்கு பழி பூஜைகள் இடம்பெற்றன. இதனை தொடர்ந்து மறுநாள் 26ஆம் திகதி பொன்னர் சங்கர் தொடர்புடைய கதை அபிநயம் செய்ததோடு அதற்குரிய பூஜைகளும் இடம்பெற்றன.

பொன்னர் சங்கருக்குரிய பாத்திரங்கள் ஊர்களுக்குள் சென்று கூத்து ஆடப்பட்டது. மஸ்கெலிய பிரவுன்சிக் பொன்னர் சங்கர் குழுவினர் கூத்தினை ஆடிக் காட்டினர்.

குறிப்பாக, இச்சடங்கு நம்பிக்கையின் அடிப்படையாகவே வருடா வருடம் இடம்பெறுகின்றது.

குறிப்பாக குழந்தை இல்லாதவர்கள் இக்கோயிலுக்கு வந்து குழந்தை வரம் வேண்டுதலை மேற்கொள்வது சிறப்பான அம்சமாகும். அதன்படி, முதல் வருடத்தில் பெரிய காண்டியம்மனை வணங்கி அடுத்து வரும் வருடத்தில் வேண்டுதலில் நன்றி நிறைவேற்றி அதற்குரிய சடங்குகளில் கலந்துகொள்வர்.

அத்தோடு, பெரிய காண்டியம்மன் கோவிலுக்கு அருகில் ஊற்றெடுக்கும் நீர் எக்காலத்திலும் வற்றாதிருப்பதும் ஓர் அபூர்வமாக இப் பிரதேச மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். அத்துடன்





இக்கோவிலை மருதை என்பவரே உருவாக்கினார். இதனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இச்சடங்கில் கலந்துகொண்டு பிரதான பூஜைகளில் கலந்துகொள்வர். இந்நிகழ்வுகள் அனைத்தும் வட்டவளை மீனாட்சி தோட்ட ஜெயராமின் தலைமையில் தோட்ட இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டதோடு தோட்ட மக்கள் பெரிய காண்டியம்மனை வழிபட்டு ஆசிகளையும் பெற்றுச் சென்றனர்.

## கொட்டகலை ரொசிட்டா பண்ணையில் தீ: பல ஏக்கர் புற்தரை எரிந்து நாசம்

(அந்துவன்)



தேசிய பண்ணை அபிவிருத்தி சபையின் கொட்டகலை ரொசிட்டா பண்ணையில் ஏற்பட்ட தீயின் காரணமாக பல ஏக்கர் புற்தரை தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.

அட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் காணப்படும் இந்த புற்தரையில் நேற்று முன்தினம் (26) பிற்பகல் ஏற்பட்ட தீயின் காரணமாக இந்த பிரதேசம் முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதன்போது இந்த பண்ணைக்கு அருகிலுள்ள கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையம் வரை தீ பரவியதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் சுமார் ஒரு மணித்தியாலம் நிறுத்தப்பட்டதுடன் இந்நிலையத்தின் ஊழியர்களின் பெரும் முயற்சியின் காரணமாக இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் தீயில் இருந்து காப்பாற்றப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் நிலையத்தில் காணப்பட்ட நீரை பயன்படுத்தி எரிபொருள் நிலையம் வரை பரவிய தீயினை பெரும் போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், இந்த தீ தொடர்ந்து மறுபுறம் பண்ணையின் புற்தரை வழியாக தொடர்ந்து பரவியது. பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வழமைக்கு திரும்பின.

## பெண்கள் தலைமைத்துவத்துக்கான ஒருநாள் செயலமர்வு கொட்டகலையில்

(செ.திவாகரன்)






எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்கள் மற்றும் செயலூக்கமுள்ள பெண் தலைமைகளுக்கான "மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல்" தொடர்பான ஒரு நாள் செயலமர்வு நேற்று (27) திங்கட்கிழமை கொட்டகலையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றத்தில் பெண்களின் தேவை மற்றும் முக்கியத்துவம், மக்கள் பிரதிநிதிகளாக ஆற்ற வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் அத்துடன் சமூகத்தின் இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் மூலம் நிறைவேற்றுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறப்புரிமைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் அரசியலமைப்புகள் மற்றும் ஒழுங்கு முறைகளை முழுவதுமாக புரிந்து கொண்டு பணியாற்றல் போன்ற விடயங்கள் குறித்து பரவலாக விவாதிக்கப்பட்டது.


தேசிய சமாதானப் பேரவை, நுவரெலியா மாவட்ட சர்வமதக் குழுவுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன், வெகுஜன ஊடகம், சுற்றாடல், சிறு ஏற்றுமதி, மொழி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய அமைச்சுகளில் செயலாளராகப் பணியாற்றிய நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் கவுன்சிலர்கள், எதிர்வரும் உள்ளூராட்சி சபைக்கு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்பட சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 50 பெண்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.


## குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஆராய

# தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் – செயலாளர் திடீர் விஜயம்









(வட்டுக்கோட்டை செய்தியாளர்)

குருந்தூர் மலையில் தற்பொழுது வேலைப்பாடுகள் நடைபெறுவதாக கிடைத்த தகவல்களையடுத்து திடீர் விஜயமொன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மேற்கொண்டனர்.

முற்றுமுழுதான இராணுவப் பிரசன்னத்துடன் குருந்தூர் மலையின் கீழ்ப்பகுதியும் மேற்பகுதியும் காணப்பட்டதுடன், குருந்தூர் மலையின் கீழ்ப் பகுதியில் ஏராளமான சுண்ணாம்பு பைக்கற்றுகளும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தங்குவதற்கான கட்டில்களும், தீயில் சுடப்பட்டுக்கொண்டிருக்கின்ற குளத்துமீன்களும், ஏற்கனவே வத்தலாக்கப்பட்ட கருவாடுகளும் காணப்பட்டன.


அங்கு சீருடையில் நின்ற இராணுவத்தினர் பலர் காட்டுக்குள் தம்மை மறைத்துக்கொண்டனர். சுட்டுமானத்திற்கான வாளி போன்ற தடயங்கள் மேற்பகுதியில் காணப்பட்டன. தண்ணிமுறிப்பு குளத்திற்குள் இராணுவத்தை தவிர வேறுயாரும் மீன் பிடிக்கவோ குளத்திற்குள் பிரவேசிக்கவோ முடியாத நிலையில் பெருவாரியான மீனைப் பிடித்து கருவாடாக்கி தென்பகுதிக்கு கொண்டுசெல்லுகின்ற செயற்பாடுகளும் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



***கிளிநொச்சி பிரமந்தனாறு பிரதேச வைத்தியசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான குழந்தைப்பிள்ளைகளுக்கான மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவி இங்கிலாந்திலுள்ள பரியோவான் கல்லூரி பழைய மாணவன் பத்மநாதன் மற்றும் அவரின் குடும்ப உறவுகளால் இந்த வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.***

## யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி புகுந்த வன்முறைக் கும்பல்

### காவலாளி மீது வாள்வெட்டுத் தாக்குதல் முயற்சி



யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல் போதனா வைத்தியசாலை காவலாளி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்றிருக்கின்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பட்டா ரக வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறை பக்கம் உள்ள நுழைவாயில் கதவால் ஏறி குதித்து வைத்தியசாலைக்குள் நுழைய முயற்சித்துள்ளது.

இதனை அவதானித்த வைத்தியசாலை காவலாளி அவர்களை தடுக்க முயன்றபோது காவலாளி மீது தாக்குதல் நடத்த முயன்றதுடன், அவர்கள் வந்த பட்டா ரக வாகனத்திலிருந்து வாளை எடுத்து காவலாளியை வெட்ட முயற்சித்துள்ளனர்.

இதனையடுத்து சுதாகரித்துக் கொண்ட காவலாளி அவர்களை தடுக்க முயன்ற நிலையில், அங்கிருந்த கதிரை, மேசை போன்றவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்திய வன்முறைக் கும்பல், பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக, யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்







(சாவகச்சேரி நிருபர்)

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில்-விட்டோல் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட 82 குடும்பங்களுக்கு கடந்த வாரம் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது சாவகச்சேரி, காரைநகர் மற்றும் உடுவில் பிரதேசங்களைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு தலா ஐயாயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதிகொண்ட உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 400 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் இயந்திர தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெற்பயிர்ச்செய்கையை விருத்திசெய்ய நடவடிக்கை

நாற்று நடல் இயந்திர (பராசூட்) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வருடம் 13 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் நாற்று நடல் இயந்திரத்தை இலவசமாக வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பராசூட் முறை என்பது நெல் நாற்றுகளை இயந்திரமொன்றின் தொழில்நுட்ப உதவியுடன் நாட்டும் முறையாகும். இம்முறை மூலமாக சாதாரண முறையில் ஏக்கரொன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலைவிட அதிகமான விளைச்சல் கிடைக்குமெனக் குறிப்பிடப்படுகிறது.

இந்தத் தொழில்நுட்பம் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 2005இல் இலங்கையில் பட்டலகொடவிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தால் (RRI) நாட்டின் முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

சீனாவில் மிகவும் வெற்றிகரமான நெற்செய்கை முறையான பராசூட் முறை இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படுகின்றபோதிலும், விவசாயிகளுக்கு அந்த முறை தொடர்பில் இன்னும் சரியான புரிதல் இல்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே, விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பராசூட் பயிர்ச்செய்கை முறையை பிரபலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு விவசாயத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் நெற்செய்கையின் விளைச்சலை அதிகரிக்க புதிய பயிர்ச்செய்கை முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டது.

பராசூட் முறையைப் பயன்படுத்துவதன் மூலம், தற்போது ஏக்கருக்கு நெல் விளைச்சலை அதிகரித்து, ஒரு விவசாயியின் வருமானத்தை ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கலாம்.

மேலும், பாராசூட் முறை அனைத்து வகையிலும் வெற்றிகரமான நெல் சாகுபடி முறையாகும், ஏனெனில் பாரம்பரிய நெல் சாகுபடிக்கு செலவிடும் தொகையை குறைத்து, உரங்களுக்கு செலவழிக்கும் தொகையை குறைத்து, களைகளை கட்டுப்படுத்தும் களைக் கொல்லிகளின் விலையை குறைத்து, அதிக விளைச்சலை பெற முடியும்.

பாராசூட் நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு சுமார் 350 நெல் நாற்று இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இக்கலந்துரையாடலில், நாட்டின் நெற்பயிர்ச்செய்கைக்காக பராசூட் முறையை பிரபலப்படுத்துவதற்காக இவ்வருட பெரும்போகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பராசூட் நாற்று இயந்திரங்களை வழங்க அரசாங்கம் கவனஞ்செலுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் இவ்வருடம் பராசூட் நெற்செய்கையை விஸ்தரிப்பதற்கு 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இம்முறையில் 13,000 ஏக்கரில் நெல் சாகுபடிசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணத்தைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு நாற்று நடும் இயந்திரங்களை இலவசமாக வழங்குவதுடன், இது தொடர்பான தொழில்நுட்ப அறிவை விவசாயிகளுக்கு வழங்கவும் வேளாண்மை வளர்ச்சித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் தற்போது விவசாய அமைச்சின் கீழ் உள்ள சிறியளவிலான விவசாய தொழில் முனைவோர் பங்கேற்புத் திட்டத்தின் கீழ் பராசூட் நாற்று இயந்திரங்களை வழங்குமாறு திட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.





'மறை வளர ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு ஜோசப்வாஸ் மன்றம் ஏற்பாடுசெய்திருந்த 27ஆவது தவக்கால திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதை நேற்று முன்தினம் (26) கொட்டாஞ்சேனை புனித வியாகுல மாதா தேவாலயத்திலிருந்து பிற்பகல் ஆரம்பமாகி கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தை சென்றடைந்தது. (படப்பிடிப்பு:- ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# கொழும்பு அடுக்குமாடிக் குடியிருப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு நகரில் தற்போதுள்ள நகர அடுக்குமாடித் திட்டங்களின் உட்கட்டமைப்பை அபிவிருத்திசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் அதன் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பில் பல வீட்டுத் திட்டங்களின் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டபோதே தலைவர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.



நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட காலிங்க மாவத்தை, கொலொம்தோட்டை சரசவி தோட்டம், பொரளை சிரிசர தோட்டம் மற்றும் மெட்சர தோட்டம், தெமட்டகொட மிஹிந்து சென்புர மற்றும் சியபத் செவன, மாளிகாவத்தை லக்ஹிரு செவன, சியசெத செவன மற்றும் லக்செத செவன, புளூமெண்டல் சிறிமுத்து தோட்டம், சிரிசத தோட்டம், ஹேனுமுல்ல ரத்மித்து செவன, ஹெலமுத்து செவன, சன்ஹிரு செவன, ரந்திய உயன, மெத்சந்த செவன மற்றும் மிஹிஜய செவன, பெர்குசன் வீதி முவதொர உயன, ஒருகொடவத்த புரதொர செவன, கொலன்னாவ சன்ஹித செவன மற்றும் லக்சத செவன ஆகிய வீட்டுத் திட்டங்கள் தலைவரின் கண்காணிப்பு விஜயத்தின்போது அவதானிக்கப்பட்டன.

இதன்போது இந்த வீடமைப்புத் திட்டங்களில் தற்போதுள்ள சில பிரச்சினைகளை அடை யாளம் காணமுடிந்தது. அடுக்குமாடித் திட்டங்களில் தற்போதுள்ள கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. சில வீட்டுத் திட்டங்களில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும், அனுமதியின்றி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குடியிருப்புவாசிகள் தலைவரிடம் தெரிவித்தனர். இதன்படி தற்போது நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு ஒருமாத காலத்துக்குள் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

# பிள்ளைகளை பாலத்தின் மீது அமர்த்திவிட்டு ஆற்றில் குதித்த தாய்!

கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இரு பிள்ளைகளை பெந்தர பாலத்தில் கைவிட்டு, ஆற்றில் குதித்து தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற பெண்ணொருவர் மீட்கப்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் தற்போது பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

நேற்று பிற்பகல் இந்தப் பெண் தனது 9 வயது மகன் மற்றும் ஒன்றரை வயதான மகளை பாலத் தின் மீது அமர்த்திவிட்டு, காலி - பெந்தர பாலத் தின் ஓரத்திலுள்ள தடுப்புச்சுவரிலிருந்து ஆற்றில் குதித்துள்ளார்.

நீரில் தத்தளித்துக்கொண்டிருந்த பெண்ணை, அருகிலிருந்த இளைஞர் ஒருவர் காப்பாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண் எல்பிட்டிய - ஊரகஸ்மங்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்துள்ளார்.

இருவருக்கும் இடையில் சிறிதுகாலமாக தகராறு இருந்துவந்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை மலாயர் சங்கத்தின் நூற்றாண்டு பூர்த்தி




(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை மலாயர் சங்கத்தின் நூற்றாண்டு பூர்த்தி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (26) ஞயிற்றுக்கிழமை கொழும்பு 2இல் உள்ள இலங்கை மலாயர் கிரிக்கெட் மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும், இந்தோ னோசியா இலங்கைக்கான தூதுவர் தேவி குஸ்ட்டினா ஆகியோர் கலந்துகொண்டு மலாய கலாசார நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் மலாய சங்கத்தின் உறுப்பினர்களது மலாயர் உணவு முறைகள், கலை, கலாசார நிகழ்வுகள் மேடையேற்றபட்டன. சிறந்த நிகழ்ச்சி களுக்கு பணப்பரிசில்களும் விருதுகளும் வழங்கப்பட்டன.

அத்துடன், கொழும்பிலுள்ள மலாயர் சமூகத்தினர் பெருமளவில் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பிரதான வீதியின் ஆடைத் தொழிற்சாலையின் பின் பகுதியிலுள்ள களப்பு பிரதேசத்தில் நேற்று (27) காலை ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 41 கிலோ 620 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.



மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் விபுர்த்திக்கு (83790) கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது குறித்த கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பதில் கடமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகேவின் பணிப்பில், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி பொ.ப.ரத்நாயக்க, பொ.சா.ரத்னமணல தலைமையிலான அணியினரே மேற்படி கேரள கஞ்சா மற்றும் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கருங்கண்டல் வண்ணாங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பன மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளது.

# மின்சார வேலியில் சிக்கி ஒருவர் பலி

முச்சக்கரவண்டியை பாதுகாப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் மின்கலத்தை திருடர்கள் பல தடவைகள் திருடிச்சென்றதன் காரணமாக முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டுள்ள கொட்டகையை சுற்றிலும் மின்சார வேலியை வீட்டு உரிமையாளர் பொருத்திவைத்துள்ளார்.

முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து ஏதோ சத்தம் கேட்ட வீட்டின் உரிமையாளர், மின்கம்பியில் ஒருவர் சிக்கியிருப்பதைக் கண்டார்.

மின்சார வயரில் சிக்கியது தனது சகோதரர்களில் ஒருவர் என்பதை அறிந்து உடனடியாக அவரை



வைத்தியசாலையில் சேர்க்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கிய நபர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அம்பலாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவு தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவு விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை - என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த,சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நேற்று (27) நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள எரியூட்டியில் எரிக்கப்பட்டு வந்திருந்தது.

இதேநேரம் நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக கொரோனா நோயாளர்கள் பாவிக்கும் அனைத்து உடைமைகளும் எரிக்க வேண்டிய நிலை காணப்பட்டதால் அதிகளவில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்டிருந்த நிலையில், எரியூட்டி இயந்திரத்தில் ஏற்பட்ட திருத்த வேலை காரணமாக தொடர்ந்து தெல்லிப்பழையில் எரிப்பதில் இடர்பாடான நிலை காணப்படுகிறது.

இப்போது நாம் வைத்தியசாலைக்கு என தனியான ஓர் எரியூட்டி இயந்திரத்தைப் பெற்று வைத்தியசாலைக்கு அண்மையில் அதனைப் பொருத்தி அதனைப் பாவிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு யாழ்ப்பாண மாநகர சபையுடன் கலந்துரையாடி கோம்பயன் மணல் பகுதியில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அமைத்து அதனை செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

இந்நிலையில், ஒரு வாரத்திற்கு முன்னர் ஆளுநரின் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைக்கப்பட்டுள்ளது. கோம்பயன் மணல் பகுதியானது எரியூட்டி அமைப்பதற்கு பொருத்தமான இடம் இல்லை எனவும் மாற்று இடம் ஒன்றைத் தெரிவுசெய்யுமாறும் கோரப்பட்டிருந்தது.

வடமாகாண ஆளுநருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம். அதேபோல் அந்த நிலைமை கைகூடும்வரை வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தனியார் நிறுவனங்கள் மூலம் எரிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, எரியூட்டி நிலையத்தை அமைத்து அதனை செயற்படுத்துவதற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி தேவைப்படும். அதேபோல் மருத்துவக் கழிவுகளை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வைத்தியசாலைகளில் தேங்கவிடாது தனியார் நிறுவனங்களிடம கொடுத்து எரிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் இந்த மருத்துவக் கழிவுகள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. வழமைபோல் வைத்தியசாலையில் சேவைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொள்ள முடியும்.

எந்தவொரு வைத்தியசாலையிலும் மருத்துவக் கழிவு என்பது இன்றியமையாத ஒரு விடயமாகும். அதேபோலத்தான் யாழ். வைத்தியசாலையிலும் அவ்வாறான ஒரு நிலை காணப்படுகின்றது. எனினும், அதற்கு விரைவில் நாங்கள் தீர்வை பெறவுள்ளோம்.

எனினும், விரைவில் எமது வைத்தியசாலைக்கென தனியான எரியூட்டி ஒன்று அமைப்பதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# "அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வசதிகளை ஏற்படுத்தித் தா" பொத்துவில் ஆதார வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம்



(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் காணப்படும் தேவைப்பாடுகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யுமாறுகோரி "அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வசதிகளை ஏற்படுத்தித்தா" எனும் தொனிப்பொருளில் நேற்று திங்கட்கிழமை (27) காலை 9.00 மணியளவில் பொத்துவில் ஆதாரவைத்தியசாலைக்கு அருகாமையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பொத்துவில் நலன்விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

''உடனடியாக நிரந்தர வைத்திய அத்தியட்சகரை நியமி, உடனடியாக சத்திர சிகிச்சை நிபுணரை நியமி, உடனடியாக பொது வைத்திய நிபுணரை நியமி, நேர்மையாக கடமை செய்த வைத்திய அத்தியட்சகருக்கு இடமாற்றமா?, அத்தியாவசிய மருந்துகளையும், வைத்திய உபகரணங்களையும் பெற்றுத் தா, நாங்களும் மனிதர்கள், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களே, எமது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுத் தாருங்கள்'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், பொத்துவில் ஆதாரவைத்திய சாலையின் பிரதான நுழைவாயிலுக்கு சென்று அங்கும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் மகஜர் கையளிக்க முற்பட்டபோது நிர்வாகத்தினர் அதனைக் கையேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 13 வயது சிறுவனைக் காணவில்லை

(கனகராசா சரவணன்)



அம்பாறை சவளக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள சொறிக்கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது சிறுவன் ஒருவன் காணாமல்போயுள்ளதாக சிறுவனின் தந்தையாரால் நேற்று திங்கட்கிழமை (27) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுவனின் தாயாரும் சொறிகல்முனையைச் சேர்ந்த தந்தையாரும் விவாகரத்து செய்துள்ள நிலையில் தீபன் சயான் என்ற 13 வயது சிறுவன் தந்தையாருடன் இருந்துள்ள நிலையில், சம்பவதினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (26) வீரமுனை பகுதியில் மரணவீடு ஒன்றிற்கு தந்தையாரும் குறித்த சிறுவனும் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சிறுவன் காணாமல்போயுள்ளதையடுத்து சிறுவனை எங்கு தேடியும் கிடைக்காத நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலய உண்டியலை உடைத்து திருட முற்பட்ட 22 வயது இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன ஊறணி பேச்சியமன் ஆலய உண்டியலை உடைத்து திருட முற்பட்ட இளைஞன் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் சனிக்கிழமை (25) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சின்ன ஊறணி பேச்சியம்மன் ஆலயத்தில் சம்பவதினமான சனிக்கிழமை இரவு 11 மணியளவில் கோயிலில் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் உடனடியாக அந்தப் பகுதி மக்களை ஒன்றிணைத்து கோயிலை சுற்றிவளைத்தபோது அங்கிருந்த உண்டியலை கல்லால் உடைக்க முயற்சித்த இளைஞனை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் எனவும் இவர் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்தவர் எனவும் இவரை ஞாயிற்றுக்கிழமை (26) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com







அட்டாளைச்சேனை இக்ராஹ் வித்தியாலயத்தில் கடந்த வருடம் 2022ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல்.யாசீன் தலைமையில் லோயீட்ஸ் ஹோட்டலில் சனிக்கிழமை (25) நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபீல் என்.எம்.அப்துல்லாஹ், உபவேந்தர் றமீஸ் அபூபக்கர், அவரோன் செரிடி மற்றும் அவரோன் இன்டெர்ஷனல் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றின் தவிசாளர் நஷாட் சம்சுதீன் உட்பட அதிதிகள் நிற்பதையும், மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(கோணாவத்தை செய்தியாளர்)

# தான் கட்டிய பரணிலிருந்து தூக்கிட்டவாறு பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு!

## பண்டாரியாவெளியில் துயரம்

(மண்டூர், மண்முனை செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரியாவெளி கிராமத்தில் மாணவன் ஒருவர் தான் கட்டிய பரணிலிருந்து தூக்கிட்டவாறு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (26) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாடசாலை வீதி பண்டாரியாவெளி கிராமத்தைச் சேர்ந்த 12 வயதுடைய நாகேந்திரன் சதுர்ஸன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அண்மையில் நடந்து முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற குறித்த மாணவன் தனது சுயவிருப்பில் வீட்டுக்குப் பின்னால் உள்ள வேப்ப மரத்தின் மேல் இருப்பிடம் அமைத்து அதன் மேல் ஏறி இருப்பது இவரின் வழக்கமான பொழுதுபோக்காக இருந்துள்ளது.

சம்பவதினம் பாடசாலை விளையாட்டுப் பயிற்சியை முடித்துவிட்டு வீடு திரும்பியுள்ளார். பின்னர் தனது தாயாருக்கான வீட்டு வேலைகளை செய்து கொடுத்துவிட்டு தாயார் கொடுத்த சிற்றுண்டியை கையில் எடுத்துக்கொண்டு குறித்த இடத்திற்கு ஏறிச்சென்று இருந்ததாகவும் இதனை மாணவனின் தாயார் பல தடவைகள் விரும்பாமல் அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் பின்னர் நேரமாகியும் தனது மகனை காணவில்லை என்று தாயார் வீட்டுக்குப் பின்னால் சென்று பார்த்தவேளை, அவர் இருந்த மரத்தின் கிளையில் கயிற்றில் தூக்கிட்டு காணப்பட்டதாக பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரியின் ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவுக்கமைவாக, சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு பரிந்துரைத்தார். மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபையினால் வீரமுனை பிரதேசத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் சிறுவர் பூங்காவை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில், செயலாளர்.எம்.கே.எம்.முஹம்மட் உட்பட உறுப்பினர்கள் பார்வையிடுவதைக் காணலாம்.

(கோணாவத்தை செய்தியாளர்)

# சாய்ந்தமருதில் சேவை நலன் பாராட்டு விழா







(வொலிவோரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது மாளிகைக்காடு கதீப், முஅத்தீன் நலன்புரி சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா சனிக்கிழமை (25) இஷாத் தொழுகையைத் தொடர்ந்து சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல வருட காலமாக பள்ளிவாசலில் சேவை செய்து ஓய்வுபெற்ற மூன்று முஅத்தீன்மார் நினைவுச்சின்னம் மற்றும் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, தற்போது பள்ளிவாசல்களில் கடமையாற்றும் கதீப், முஅத்தீன்மார் அவர்களது அயராத சேவையைப் பாராட்டி சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு கதீப், முஅத்தீன் நலன்புரி சம்மேளனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷாதி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, மருதமுனை தாருல் ஹுதா பெண்கள் அறபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல்.முபாரக் (மதனி) பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் சாய்ந்தமருது - மாளிகைக்காடு கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.சலீம் (ஷர்க்கி) சிறப்பு அதிதியாகவும் மற்றும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், முபாரக் டெக்ஸ்டைல்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். முபாரக், சிங்கர் ஷோ ரூம் உரிமையாளர் எஸ்.எச்.ஜிப்ரி, தொழிலதிபர் எஸ்.எம்.அமீன் உட்பட சாய்ந்தமருது - மாளிகைக்காடு கதீப், முஅத்தீன் சம்மேளன உறுப்பினர்கள், சகல பள்ளிவாசல்களின் நிர்வாக உறுப்பினர்கள், நலன்விரும்பிகளும் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். சாய்ந்தமருது - மாளிகைக்காடு கதீப், முஅத்தீன்களுக்கு மாநகர சபை உறுப்பினரும் தொழிலதிபருமான என்.எம்.றிஸ்மிரினால் பங்களிப்பு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீடு!







(அபு அலா, திராய்க்கேணி செய்தியாளர்)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கவிதாயினி மேகா மிர்சா எழுதிய 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கூட்ட மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், பொத்துவில் மக்கள் வங்கிக் கிளையின் வியாபார திட்ட முகாமையாளர் எம்.ஐ.எம்.நபில், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாநிதி ரியாத் ஏ. மஜித் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நூல் ஆய்வினை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், நூல் அறிமுகத்தை பன்னூலாசிரியர் எஸ்.எல்.மன்சூரும், நூல் நயத்தினை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜுல்பிகா ஷெரிப்பும் நிகழ்த்தினர்.

இவ்விழாவில் சட்டத்தரணிகள், வைத்தியர்கள், இலக்கியவாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

# ஸ்ரீ சத்தியசாயி சஞ்சீவனி வைத்தியசாலைக்கு கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத் விஜயம்

(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா செய்தியாளர்)




இந்திய ஸ்ரீ சத்தியசாயி கருணாநிலையம் அறக்கட்டளையால் நடத்தப்படும் மட்டக்களப்பில் உள்ள ஸ்ரீ சத்தியசாயி சஞ்சீவனி வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் விஜயமொன்றினை மேற்கொண்டார்.

இந்த மருத்துவமனை மூலம் சிறு குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தற்போது இல்லாத இருதய வடிகுழாய் சிகிச்சைப் பிரிவு (cath lab) அடுத்த மாதத்திற்குள் நிறுவப்படவுள்ளதாகவும் சத்யசாயி கருணா நிலையம் அறக்கட்டளை மூலம் நெதர்லாந்திலிருந்து இதற்கான பொருட்களை கொண்டுவரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மருத்துவமனையை சுற்றியுள்ள தருமபுரம், கிரண் குளம் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் இலவச உணவு வழங்கப்படுவதுடன், அப்பகுதி மக்களுக்கு இலவச மருந்து வழங்க வெளிநோயாளர் பிரிவும் செயல்பட்டு வருகிறது. இதன்போது, வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பென்னி ஜயவர்தன, பிரதம வைத்திய அதிகாரி சிஷ்ரமிக்க பிரிகேடியர் ஏ.எஸ்.எம்.பாரிஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.





புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான நிகழ்வு சனிக்கிழமை (25) பள்ளிவாசலில் நடைபெற்றது. பள்ளிவாசல் தலைவர் கே.எல்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு இரத்த வங்கி வைத்தியர் எஸ்.ஆர். ஜயகொட மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பீ.எம்.எம்.பைஸால் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (காத்தான்குடி செய்தியாளர்)



இலங்கை கிரிக்கெட் சபையின் கீழ் இயங்கிவரும் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "டிவிஷன் 3" கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற "ஸ்பென்ஸ்" விளையாட்டுக் கழக வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை செவிப்புலனற்றோர் மண்டபத்தில் இடம்பெற்றது. கழகத்தின் தலைவர் குகதாஸ் பிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் டி.தனேஸ்வரன் மற்றும் ஓய்வுபெற்ற உதவிக் கணக்காளர் தம்பு பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு வீரர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர். (அப்துல்சலாம் யாசீம்)

## மயிலத்தமடுவில் அத்துமீறி குடியேறியோரால்

# தமிழர்களுக்கு சொந்தமான கால்நடைகள் கொலைசெய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும்

### என்கிறார் சங்கத்தின் தலைவர் தியாகராஜா

*(புளியந்தீவு, மட்டக்களப்பு செய்தியாளர்கள்)*

மயிலத்தமடுவில் காலங்காலமாக தமிழரின் பசுக்கள் அப்பகுதியில் அத்துமீறி குடியேறிய பெரும்பான்மை மக்களால் கொலைசெய்யப்படுவது தொடர்கதையாக இருந்துவருகின்றது. சமீபகாலமாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுவருவது கவலையளிப்பதாகவும் இதனை தடுக்க வேண்டுமெனவும் மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி. தியாகராஜா(விமலன்) தெரிவித்தார்.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் ஸ்தலத்துக்கு வருகைதந்து பார்வையிட்டதுடன், கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கும் சென்று பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணையாளர்கள் சார்பில் பேசியதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் மயிலத்தமடுவில் பூர்வீகக் காலந்தொட்டு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அண்மைக்காலமாக அத்துமீறி குடியேறி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மையின விவசாயிகளால், மேய்ச்சல் தரையிலுள்ள பசுக்கள் கொலைசெய்யப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அவர்களை வெளியேற்றவேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனை செயல்படுத்தும் பொறுப்பு மகாவலி அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டது. இற்றைவரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை. இது நீதிமன்ற கட்டளையை மீறும் செயலாகும். இதனாலேயே முரண்பாடுகளும் குழப்பங்களும் தோன்றுகின்றன.

கால்நடைகளை துப்பாக்கியால் சுட்ட குறித்த நபரை அப்பகுதியிலிருக்கும் பெரும்பான்மை மக்களே எமக்குக் காட்டிக்கொடுத்தனர். பொலிஸார் அப்பகுதிக்கு விசாரணைக்காக வந்தபோது அப்பகுதி மக்கள் இதுபற்றி தங்களுக்கு எதுவும் தெரியாதென கைவிரித்துவிட்டார்கள். இதனால் குறித்த நபரை கைதுசெய்ய முடியாமல் போய்விட்டது. மேலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு செங்கலடி மத்தியஸ்த சபைக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்தலத்திற்கும் பொலிஸ் நிலையத்துக்கும் வருகைதந்து இதுகுறித்து பேசியபோதிலும் சந்தேகநபர் கைதுசெய்யப்படவில்லை.

இது கால்நடை பண்ணையாளர்களுக்கு பாரிய மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையிட்டுள்ளோம் - என்றார்.

# கல்குவாரி குட்டையினுள் மூழ்கி சிறுவன் பலி!

*(சம்மாந்துறை செய்தியாளர், பாறுக் ஷிஹான்)*

சம்மாந்துறை சென்னல் கிராமம் 1 சேவையாளர் பிரிவிலுள்ள கல்குவாரி குட்டை பகுதியில் குளிக்கச்சென்ற 12 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவமொன்று ஞாயிற்றுக்கிழமை (26) மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மூன்று சிறுவர்கள் சம்பவ இடமான கல்குவாரி பகுதியில் நீர் காணப்பட்டதால் குளிப்பதற்காக தயாராகியுள்ளனர். உயிரிழந்த சிறுவன் மற்ற இரு நண்பர்களையும் குளிப்பதற்காக அழைத்துள்ளார். அவர்கள் முடியாது என்று கூற அச்சிறுவன் முதலில் ஓர் உயரமான மலையில் ஏறி குறித்த குட்டையினுள் பாய்ந்துள்ளார். குட்டையின் ஆழத்தை அறியாமல் பாய்ந்த அச்சிறுவனை காணவில்லையென உடனிருந்த இரு சிறுவர்களும் சத்தம் போட்டு கூச்சலிட்டதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு திங்கட்கிழமை (27) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இந்த கல்குவாரி குட்டை சுமார் 20 வருடங்களாக உபயோகிக்கப்படாமல்



காணப்படுவதாகவும் சுமார் 30 அடி ஆழம்கொண்டது எனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வங்கி பாதுகாவலர் சடலமாக மீட்பு

*(கனகராசா சரவணன்)*

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் பிரதேசத்தில் வீடு ஒன்றில் வங்கியில் பாதுகாவலராக கடமையாற்றிவரும் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில் திங்கட்கிழமை (27) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பிலுவில் வீ.சி.வீதியைச் சோந்த 2 பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய நாகமணி கணேசமூர்த்தி என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த நபர் கடமையை முடித்துவிட்டு வீடுவந்த நிலையில் சம்பவதினம் அதிகாலை அவரது அறையை திறந்து பொதுஅறையின் கூரையில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவை பெற்று வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கு நுளம்பு பரவும் சூழல் காணப்படின் சட்ட நடவடிக்கை

### சுகாதார வைத்திய அதிகாரி இஸ்ஸடீன்

*(பொத்துவில் செய்தியாளர்)*

டெங்கு நுளம்பு பரவும் சூழல் அடையாளம் காணப்பட்டால் உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த காலங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு, நோயாளர்கள் பலர் வைத்தியசாலைகளிலும் சேர்க்கப்பட்டனர். கடந்த சில தினங்கள் பெய்த மழை காரணமாக நீர் தேங்கும் இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. இதனால் மேலும் டெங்கு அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

குறிப்பாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு தொடர்பில் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். பொதுமக்கள் தங்களது வீடுகள், சுற்றுப்புறச்சூழல், வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தவிடயம் தொடர்பில் சகலரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். எமது காரியாலயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட டெங்கு ஒழிப்புக்குழுவினர் எதிர்வரும் தினங்களில் கள விஜயம் மற்றும் டெங்கு பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்போது டெங்கு நுளம்பு பரவும் சூழல் அடையாளம் காணப்பட்டால் உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடலுக்கு நீராடச்சென்ற மாணவன் நீரில் மூழ்கிப் பலி

*(மண்டூர் செய்தியாளர்)*

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களுதாவளை கடலில் நீராடச்சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (26) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோஸ்போஸ் வீட்டுத்திட்டம் களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த நவேந்திரன் சுவிஸ்சன் (வயது14) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி சடலமாக மீட்கப்பட்டவராவார்.

களுதாவளை மகாவித்தியாலயத்தில் தரம்-10இல் கல்வி கற்றுவரும் குறித்த மாணவன் விடுமுறை தினம் என்பதனால் தனது சக நண்பர்களுடன் கடற்கரையில் விளையாடிவிட்டு கடலில் குளிப்பதற்கு சக நண்பருடன் கடலில் இறங்கியபோது அலையில் சிக்குண்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். கரையில் நின்றவர்கள் இவரைக் காப்பாற்ற முயற்சித்தபோதிலும் முடியாமல் போனதாகவும் பின்னர் கடல் அலையினால் அடித்துச்சென்று கரைசேர்க்கப் பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதியில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துக்கு சிரமம்

*(பாறுக் ஷிஹான்)*

வீதியில் வெள்ள நீர் தேங்கி இருப்பதன் காரணமாக வாகனச் சாரதிகள், பாதசாரிகள் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள யாட் வீதியில் தேங்கிக்கிடக்கின்ற வெள்ள நீர் காரணமாகவே இச்சிரமங்களுக்கு பொதுமக்கள் முகம்கொடுத்துள்ளனர்.

இவ்வீதியினூடாக அரச தனியார் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் அன்றாடம் தமது போக்குவரத்து பாதையாக பாவித்து வருகின்றனர். இவ்வாறு வெள்ள நீர் தொடர்ச்சியாக தேங்கி வடிந்தோடாமல் காணப்படுவதனால் மாற்று பாதையை நாடுவதை அவதானிக்க முடிகின்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகமான காகங்கள் குளிக்கின்ற இடமாக இப்பாதை மாறி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

இது தவிர, வெள்ள நீர் தேங்கியுள்ள வீதியினால் பயணம் செய்கின்ற வாகனங்கள் திடீரென பழுதடைந்து தரித்து நிற்பதையும் காணமுடிகின்றது.



மேலும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# பாலர் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தினால் சம்மாந்துறை ப்ரில்லியன்ட் பாலர் பாடசாலைக்குத் தேவையான கதிரைகள், மேசைகள் மற்றும் அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாலர் பாடசாலைகளுக்குத் தேவையான ரூபா 65 ஆயிரம் பெறுமதியான கதிரைகள், மேசைகள் மற்றும் அத்தியாவசிய கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வை, பாலர் பாடசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.முஹம்மட் சர்ஜுன் ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டு பொருட்களை வழங்கினர்.

மக்களுக்கு யோகா கலையின் உண்மைகளை உணர்த்த சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையே அறிவொளி வளையம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிசிச்சையளிக்கப்பட்டுவந்த காட்டுயானை உயிரிழப்பு



*(வெல்லாவெளி செய்தியாளர்)*

மட்டக்களப்பு கொம்மாந்துறை தீவுப் பகுதியில் 20 நாட்களாக சிசிச்சையளிக்கப்பட்டுவந்த காட்டு யானை சிசிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை (27) அதிகாலை உயிரிழந்துள்ளதாக அம்பாறை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்தியர் நிஹால் புஷ்பகுமார தெரிவித்திருந்தார்.

காலில் துப்பாக்கிச்சூடு பட்டுள்ளதால் எலும்பு உடைந்திருக்கலாம் எனவும் விழுந்து கிடந்து உயிருக்குப் போராடும் யானையை மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உணவளித்து பராமரித்து வந்துள்ளதுடன், இதுவரையிலான காலப்பகுதியில் மூன்று தடவைகள் அம்பாறை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்திய குழாமினர் யானைக்கு தீவிரமான முறையில் சிசிச்சையளித்து வந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், குறித்த யானையானது நேற்றையதினம் உயிரிழந்துள்ளது. உயிரிழந்த காட்டு யானையை பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராமசேவை உத்தியோகஸ்தர் முன்னிலையில் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு புதைக்கப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



**ஏழு நாட்களுக்கு நீலாவணையில் திடீரென புத்தபகவான் கல்சிலை ஒண்ட அக்கத்தில இருக்கிற இராணுவச் சிப்பாய் பேசாம றோட்டு பக்கம் வைச்சவர் எலுவா..? இத கேள்விப்பட்ட நம்மட சனம் அங்கு திரள புத்தர் சிலய புடுங்கித்து இராணுவ முகாமுக்குள பேசாம கொண்டுபோய்த்தாங்க.. அடே புத்தர புனிதமா வணங்கிற நீங்க ஏண்டா அவர அசிங்கப்படுத்தி இனவாத சின்னமாக சித்திரிக்கிறயள்! புத்தரிட போதனய ஒழுங்கா படிச்சா அவரையே அசிங்கப்படுத்தமாட்டயள்டா மோட்டு சிங்கள இராணுவமே.!**

# போதைப்பொருள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு



*(பாறுக் ஷிஹான்)*

மாணவர் சமூகத்தின் மத்தியில் காணப்படும் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்யும்பொருட்டும் அது தொடர்பாக மாணவர் களை விழிப்படையச் செய்யும் வகையிலும் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையம் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இதற்கமைய பாடசாலை மட்டத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு கமு/கமு/அல்-பஹ்றியா தேசிய பாடசாலையில் வெள்ளிக் கிழமை (24) இடம்பெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமை தாங்கினார். க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்குப் போதைப்பொருள் குற்றச்செயல்களை தடுப்பது, போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்தல், போதைவஸ்து தடுப்பு மற்றும் சுற்றுச்சூழலில் போதைப்பொருளின் தாக்கம் தொடர்பில் விரிவாக விளக்கவுரைகள் இடம்பெற்றன.

இங்கு கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் கருத்து தெரிவிக்கையில், கல்முனை பகுதியில் போதைப்பொருள் பாவனை பரவல் அதிகரித்திருக்கின்றது. இதற்காக விழிப்பூட்டல்களை நாம் மேற்கொண்டுள்ளோம். அதனைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# வீட்டுத்தோட்ட முயற்சியாளர்களுக்கு பருப்பு விதைப்பொதி வழங்கிவைப்பு




*(வெல்லாவெளி செய்தியாளர்)*

அம்பாறை மாவட்டத்தின் வறிய மற்றும் வருமானம் குறைந்த தெரிவுசெய்யப்பட்ட வீட்டுத்தோட்ட முயற்சியாளர்கள் 150 பேரை கிளிநொச்சியை பிரதான தலைமையகமாகக்கொண்டு இயங்குகின்ற புதிய வாழ்வு நிறுவனத்தின் பேராளர் குழு, கட்டம் கட்டமாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் சந்தித்தது.

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் வேண்டுகோளை ஏற்று புதிய வாழ்வு நிறுவனத்தின் விவசாய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ரூபா 21 இலட்சம் பெறுமதியான ஊக்குவிப்பு வேலைத்திட்டம் வீட்டுத்தோட்ட முயற்சியாளர்களுக்காக கடந்த ஒக்டோபர் மாதம்முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர். வீட்டுத்தோட்ட முயற்சிக்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பிப்பதற்கு தலா 5 ஆயிரம் ரூபா முதலில் வழங்கப்பட்டது. இந்நிலையில், புதிய வாழ்வு நிறுவனத்தின் புலம்பெயர் நாட்டு பணிப்பாளர்களில் ஒருவரும், அம்பாறை மாவட்டத்துக்கான வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் முன்னிலை வழிகாட்டி செயற்பாட்டாளருமான சுப்பிரமணியம் மகேசன் தலைமையிலான பேராளர்கள் இரண்டாம் கட்ட ஊக்குவிப்பை வழங்க கடந்த நாட்களில் விஜயம் மேற்கொண்டது.

இவர்கள் நாவிதன்வெளி, கல்முனை, காரைதீவு, வீரமுனை, மல்வத்தை போன்ற பிரதேசங்களுக்கு களப்பயணம் மேற்கொண்டு பயனாளிகளின் வீட்டுத்தோட்ட முயற்சியை நேரில் பார்வையிட்டு திருப்தி கண்டு மகிழ்ச்சி வெளியிட்டதுடன், அவசியமான ஆலோசனைகளையும் வழங்கினார்கள். பின்னர் சமாசத்தின் கல்முனை தலைமையகத்தில் வைத்து பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட ஊக்குவிப்பாக தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான விதை பருப்பு பொதிகளை வழங்கினார்கள்.

உலக செய்திகள்

# கடலில் மூழ்கிய அகதிகள் கப்பல்: 12 குழந்தைகள் உட்பட 59 பேர் பலி!



இத்தாலியில் அகதிகளை ஏற்றிச்சென்ற கப்பலொன்று கடலில் மூழ்கியதில் 12 குழந்தைகள் உட்பட 59 பேர் உயிரிழந்துள்ளனர்.

வறுமை உள்ளிட்ட காரணங்களால் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் இத்தாலிக்கு புலம்பெயர் தொழிலாளர்களாக இடம்பெயர்கின்றனர். அந்தவகையில் ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 120இற்கும் மேற்பட்ட அகதிகளுடன் இத்தாலியின் Calabria பகுதி நோக்கிச் சென்ற சிறிய ரக கப்பலொன்று எதிர்பாராதவிதமாக கரையிலிருந்து சில மீற்றர்கள் தொலைவிலிருந்த பாறை மீது மோதியது.

கடல் சீற்றத்தால் ஏற்கனவே சேதமடைந்திருந்த குறித்த கப்பல், நீரில் வேகமாக மூழ்கத் தொடங்கியதும் சிலர் வேகமாக நீச்சலடித்து கரை சேர்ந்தனர். இந்த விபத்தில் பிறந்து சில மாதங்களேயான குழந்தை உட்பட 12 குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 59 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து கலாப்ரியா ஆளுநர் ரொபர்டோ கியூடோ தெரிவிக்கையில்,

கலாப்ரியா மாகாணத்துக்கு இது ஒரு துக்கமான நாளாகும். பொதுவான அலட்சியத்தால் இதுபோன்ற விபத்து நிகழ்கிறது. கலாப்ரியா எப்போதும் தொழிலாளர்களை வரவேற்றுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 18,000 புலம்பெயர் தொழிலாளர்களை வரவேற்றுள்ளோம். ஐரோப்பா எங்களை ஒருபோதும் கைவிடாது. எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற விபத்துகள் தடுக்கப்பட வேண்டும் - என்று தெரிவித்தார்.

கப்பலின் உடைந்த பாகங்கள் மற்றும் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. விபத்தில் நீரில் மூழ்கி காணாமல்போனோரின் நிலை என்னவென்று தெரியாத நிலையில் அவர்களை தேடும் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## அமெரிக்காவை பந்தாடும் பனிப்புயல்

### இருளில் மூழ்கிய கலிபோர்னியா; 1.20 இலட்சம் பேர் பரிதவிப்பு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தை பயங்கர பனிப்புயல் புரட்டிப்போட்டுள்ளது. புயல் காரணமாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் இருளில் தவித்து வருகின்றனர்.

பனிப்புயல் காரணமாக கலிபோர்னியா முழுவதும் நூற்றுக்கணக்கான விமானங்கள் இரத்துசெய்யப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் பரிதவிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அமெரிக்காவின் மேற்கு மாகாணமான கலிபோர்னியாவில் வீசிவரும் பயங்கர பனிப்புயல் அந்த மாகாணத்தை புரட்டிப்போட்டுள்ளது. குறிப்பாக, அந்த மாகாணத்தின் மிகப்பெரிய நகரான லொஸ் ஏஞ்சல்ஸ் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மணிக்கு 112 கி.மீ. வேகத்தில் புயல் காற்று வீசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புயல் காரணமாக மாகாணம் முழுவதும் கடுமையான பனிப்பொழிவுடன், மழையும் கொட்டி வருகிறது. இதனால் வீதியெங்கும் பனித்துகள்கள் பல அடி உயரத்துக்கு குவிந்து கிடக்கின்றன. மேலும் மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியுள்ளயது. புயலின் போது ஏராளமான மின்கம்பங்கள் சரிந்து வீழ்ந்துள்ளதால் லொஸ் ஏஞ்சல்ஸ் உட்பட பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மட்டும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் இருளில் தவித்துவருகின்றனர்.

## பாகிஸ்தானில் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு



பாகிஸ்தான் மருத்துவமனைகளில் இன்சூலின் உள்ளிட்ட முக்கியமான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் பாகிஸ்தான், பல்வேறு மருந்துகளின் இறக்குமதியை நிறுத்திவைத்துள்ளது. இந்நிலையில், இன்சூலின், பெரசிடமோல்ட், கால்போல் போன்ற அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மருந்துகள் கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையின்போது பயன்படும் அனஸ்தியா மருந்து, 2 வாரங்களுக்கு மட்டுமே இருப்பு இருப்பதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## டில்லி தெருமுனை டீக்கடையில் ஜேர்மனி பிரதமர் ஓலப் ஸ்கோல்ஸ்



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மனி பிரதமர் ஓலப் ஸ்கோல்ஸ் (Olaf Scholz) டில்லியிலுள்ள வீதியோர தேநீர்க் கடையொன்றில் தேநீர் அருந்திய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

அரசமுறைப் பயணமாக கடந்த 25ஆம் திகதி இந்தியா விஜயம் மேற்கொண்ட ஜேர்மனி பிரதமர் ஓலப் ஸ்கோல்ஸ்க்கு ஜனாதிபதி மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. இதையடுத்து அவர் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார். அப்போது இரு நாடுகளிடையே பரஸ்பரம் ஒத்துழைப்பு, வர்த்தகம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசினை மேற்கொண்டனர்.

இந்நிலையில், பிரதமர் ஓலப் ஸ்கோல்ஸ் டில்லியிலுள்ள வீதியோர தேநீர்க்கடை ஒன்றில் தேநீர் அருந்தினார். இந்தப் புகைப்படங்களை இந்தியாவுக்கான ஜேர்மனி தூதரகம் தங்களது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

ருசியான கப் தேநீர் இல்லாமல் இந்தியாவை எப்படி சுற்றிப்பார்க்க முடியும்?. தெரு முனையிலுள்ள டீக்கடைக்கு பிரதமர் ஓலப் ஸ்கோல்ஸ்யை நாங்கள் அழைத்துச் சென்றோம். நீங்கள் அனைவரும் அங்கு செல்லவேண்டும். இந்தியாவின் உண்மையான சுவை இது தான் என ஜேர்மனி தூதரகம் தெரிவித்துள்ளது.

# மகளிர் கிரிக்கெட்டில் அசைக்க முடியாத அணியாக வலம்வரும் ஆஸி.

## ஆறாவது சம்பியன் பட்டத்தை கைப்பற்றி சாதனை



எட்டாவது ஐ.சி.சி மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை 19 ஓட்டங்களினால் வெற்றிகொண்ட அவுஸ்திரேலிய மகளிர் அணி, ஆறாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றதுடன், ஹெட்ரிக் உலகக்கிண்ணத்தையும் கைப்பற்றி மகளிர் கிரிக்கெட்டில் அசைக்க முடியாத அணியாக திகழ்கிறது.

தென்னாபிரிக்காவில் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுவந்த குறித்த உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங்கை தெரிவுசெய்து களமிறங்கியது. அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்கள் குவித்திருந்தது. அணியில் அதிகபட்சமாக பெத் முனே 53 பந்துகளில் 74 ஓட்டங்கள் குவித்திருந்தார். 20 ஓவர்களுக்கு 157 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி வெற்றி இலக்கை அடைய மிகப்பெரிய போராட்டத்தை வெளிப்படுத்தியது.

இருப்பினும் 20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணியால் 6 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது. அவுஸ்திரேலிய அணியின் இந்த வெற்றியின் மூலம் மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தை 6ஆவது முறையாக வென்றது. இதுவரையில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடர்களில் ஆஸி. அணி 6 சம்பியன் பட்டங்களையும், இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் தலா ஒவ்வொரு பட்டங்களையும் வென்றுள்ளன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



நியூசிலாந்து அணியுடனான இரு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை டெஸ்ட் அணி நேற்று அதிகாலை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நடைபெற்ற சமய நிகழ்வுகளின் பின்னர் நியூசிலாந்து நோக்கி புறப்பட்டது.

## கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்க கிரிக்கெட் தொடரில் சம்பியனான கொழும்பு ரைடர்ஸ் அணி

(மொஹமட் நஸார் )




கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி அண்மையில் ராஜகிரிய மொரகஸ்முல்ல ஜனக்க ரணவக்க மைதானத்தில் நடைபெற்றது.

கொழும்பு மாவட்டத்தின் அனைத்து ஊடக நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் அடங்கிய 6 அணிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிப்போட்டியில் கேம் ஸ்விங்கர்ஸ் அணியை வீழ்த்தி, கொழும்பு ரைடர்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

போட்டியின் ஆரம்ப நிகழ்வில் வெகுஜன ஊடக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் குழுவினரும் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

25 வருடங்களுக்கும் மேலாக உள்ளூர் ஊடகவியலாளர்களாக பணியாற்றிய மார்வின் தப்ரு, சிறிசேன துடுவகே மற்றும் சாந்த செனவிரத்ன ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி ஊடகத்துறை அமைச்சரால் விசேட அஞ்சலியும் வழங்கப்பட்டது.

போட்டியின் சிறந்த பேட்ஸ்மேனாக கேம் ஸ்விங்கர்ஸ் அணியின் ரிஷான் மதுசங்கவும், சிறந்த பந்துவீச்சாளராக காலியை சேர்ந்த கொழும்பு ரைடர்ஸ் அணியின் அமலும், இறுதிப்போட்டியின் நாயகனாக கொழும்பு ரைடர்ஸ் அணியின் டிலான் பிரசன்னாவும் தெரிவாகினர்.

## கிரிக்கெட்டில் கலக்கும் நடிகர்கள்

(ரமணி)



தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட 8 மாநில திரைப்படத் துறையிலுள்ள நடிகர்கள் பங்கேற்கும் செலிபிரிட்டி கிரிக்கெட் லீக் என்ற கிரிக்கெட் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கான நட்சத்திர கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை தொடங்கியது. ஹைதராபாத், ராய்ப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், ஜெய்ப்பூர், ஜோத்பூர் ஆகிய 6 நகரங்களில் நடைபெற்று வருகிறது.

தமிழ் நடிகர்களின் சென்னை ரைனோஸ் அணியின் கெப்டனாக ஆர்யா உள்ளார். இந்த அணியில் ஜீவா, விஷ்ணு விஷால், பரத், விக்ராந்த், ஆதவ் கண்ணதாசன், சாந்தனு, பிருத்வி ஆகியோர் விளையாடுகின்றனர். தெலுங்கு வாரியர்ஸ் அணி கெப்டனாக நாகார்ஜுனாவின் மகனும் நடிகருமான அகில் அக்கினேனி உள்ளார்.

தனது தரமான பேட்டிங் பார்மைத் தொடர்ந்த அகில் அக்கினேனி 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆட்டத்தில் தெலுங்கு வாரியர்ஸ் பெங்கால் டைகர்ஸ் அணிகள் மோதின. தெலுங்கு வாரியர்ஸ் அணியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கெப்டன் அகில் அக்கினேனி பவுண்டரி, சிக்ஸர்களை பறக்கவிட்டார். மேலும், தொடரில் தனது 3 அரைசதத்தையும் பதிவு செய்தார். கடைசி வரை களத்தில் அகில் 26 பந்துகளில் 57 ஓட்டங்களும், அஷ்வின் 17 பந்துகளில் 43 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த ஆட்டத்தில் பெங்கால் டைகர்ஸ் அணியை தெலுங்கு வாரியர்ஸ் அணி வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

தனது தரமான பேட்டிங் பார்மைத் தொடர்ந்த அவர் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். தொடர்ச்சியாக 3ஆவது அரைசதத்தையும் விளாசி மிரட்டினார். இதனால், அகில் சினிமா நட்சத்திரமா அல்லது கிரிக்கெட் நட்சத்திரமா? என்று வியந்து அவரை பாராட்டி வாழ்த்துமழை பொழிந்து வருகிறார்கள்.

## பீபாவின் சிறந்த வீரர் போட்டியில் மோதும் வீரர்கள்




(ரமணி)

பரிஸில் இன்று 28ஆம் திகதி நடைபெறும் பீபாவின் சிறந்த வீரருக்கான போட்டியில் லியோனல் மெஸ்ஸி, கைலியன் எம்பாப்பே, கரீம் பென்ஸீமா ஆகியோர் உள்ளனர். பீபா விருதுகளில் லியோனல் மெஸ்ஸி தலைசிறந்து விளங்குவார் என்றும், கைலியன் எம்பாப்பே, கரீம் பென்சிமா ஆகியோரை வீழ்த்துவார் என்றும் கசிந்துள்ளது.

PSG நட்சத்திரங்களான லியோனல் மெஸ்ஸி, கைலியன் எம்பாப்பே, ரியல் மாட்ரிட்டின் கரீம் பென்செமா ஆகியோர் சிறந்த ஆடவர் வீரர் விருதுக்கான இறுதிப் போட்டியாளர்களாக அறிவிக்கப்பட்டனர், மேலும் மதிப்புமிக்க கிண்ணத்தை யார் பெறுவார்கள் என்பதைப் பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். மெஸ்ஸி கடந்த ஆண்டு அற்புதமான பார்மில் இருந்தார், ஏமாற்றமளிக்கும் முதல் சீசனுக்குப் பிறகு PSG க்கு சிறந்த வெற்றிகளைத் தேடிக்கொடுத்தார். இந்த ஆண்டு அவர் ஆர்ஜென்ரீனாவை உலகக் கிண்ண சம்பியனாக்கினார். இறுதிப் போட்டியில் மாப்பேயின் பிரான்ஸை தோற்கடித்தார். இதற்கிடையில், மாப்பே PSG உடன் 2021-22 Ligue 1 பட்டத்தை வென்றார். மேலும் உலகக் கிண்ணப்போட்டியில் பிரான்ஸ் இரண்டாம் இடத்தைப் பெற உதவினார்.

பென்சிமா கடந்த ஆண்டு பலோன் டிஓரை வென்றார், ரியல் மாட்ரிட்டை லா லிகா, யுஇஎவ்ஏ சாம்பியன்ஸ் லீக் மற்றும் கிளப் உலகக் கிண்ணம் ஆகிய பட்டங்களுக்கு அணியை அழைத்துச் சென்றார். காயம் காரணமாக உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறிய பென்ஸிமா மீண்டும் களமாடிய அவர் சம்பியன்ஸ் லீக் ரவுண்ட் ஓவ் 16 முதல் லெக்கில் லிவர்பூலுக்கு எதிரான 5 - 2 என்ற கணக்கில் தனது அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார்.

ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் பிரான்செஸ்க் அகுய்லரின் கூற்றுப்படி, லியோனல் மெஸ்ஸி சிறந்த பீபா ஆடவர் விருதை வெல்ல உள்ளார். கடந்த ஆண்டு மெஸ்ஸியை தங்கள் விருதுக்கு பரிந்துரைக்கவில்லை என்பதை பீபா B அல்லொன்ட் ஓர் அமைப்பாளர்களுக்கு நினைவூட்ட விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7